ஞானசம்பந்தம்

மலர் 12]   நந்தனஷு மாசிமீ 10—3—53.   [இதழ்

திருவீழிமிழலையில்:

திருஞானசம்பந்தரும்,

திருநாவுக்கரசரும்

படிக்காசு பெறுதல்

ஆசிரியர்: நாகலிங்கத் தம்பிரான்.

உதவி ஆசிரியர் தண்டபாணி தேசிகர்.

தருமபுர ஆதீ

சமயச்சொற்பொழிவுகளும், இசை நிகழ்ச்சியும்.

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்கோளிலி ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் சுந்தரர் நெல்மலைபெறும் மகோற்சவம் மாசிமாதம் 16, 17, 18, 19 ஆகிய நான்கு நாட்களிலும் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அப்போது சமயச் சொற்பொழிவுகளும் இசையரங்கும் நிகழ்ந்தன, 27—2—53ல் தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், நாகை நேஷனல் ஹைஸ்கூல் தலைமைத் தமிழாசிரியர், வித்வான், திரு. வை. மு. சண்முகதேசிகர் அவர்கள் "சுந்தரர் கவிநலம்". 28—2—53ல் தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், தருமையாதீனப் பல்கலைக்கல்லூரிப் பேராசிரியர், புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் "திருநீலகண்டர்". 1—3—53ல் தருமபுர ஆதீன இசைக்கல்லூரி ஆசிரியர், திரு. P. சுவாமிநாத முதலியாரவர்கள் பாட்டு, தருமபுர ஆதீன இசைக்கல்லூரிப் பேராசிரியர், திரு. T. S. சம்பந்தம்பிள்ளை அவர்கள் பிடில், தருமபுர ஆதீன இசைக்கல்லூரி மிருதங்காசிரியர், திரு. R. விசுவநாத அய்யர் அவர்கள் மிருதங்கம்.

இலவச தேவாரவகுப்பு.

தருமபுர ஆதீனத்திலும், ஆதீனத்தைச்சார்ந்த பெரிய தேவஸ்தானங்களிலும் தேவார ஆசிரியர் ஒருவரை நியமித்து, அங்குள்ள சிறுவர் சிறுமியர்களுக்கு இளமையிலேயே கடவுள் உணர்ச்சி உண்டாகத் திருமுறைப் பாடல்கள் போதிக்கப்பெற்று வருகின்றன. அந்தத்திட்டத்தில் ஆதீனத்துக்குச் சொந்தமான திருவாரூர் இராஜன்கட்டளையின் சார்பில் ஸ்ரீ தியாகராஜசுவாமி கோயில் ராஜநாராயண மண்டபத்தில் இலவச தேவார வகுப்பு இம்மாதமுதற்கொண்டு தொடங்கி நடைபெற்றுவருகிறது.

ஜன்மநக்ஷத்திரத் திருநாள்.

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்மநக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம்பெற்ற சிவஸ்தலங்களில் ஆதீனச்சார்பில் அபிஷேக ஆராதனைகள்செய்வித்து அவ்வத் தலப்பதிகத்தையும் அச்சிட்டு வழங்கிவருதல்போல, இம்மாதத்திலும் 3—3—53 அன்று திருத்திலதைப்பதி ஸ்ரீ முத்தநாதசுவாமி ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிகம் அடங்கிய வெளியீடும் அன்பர்கட்கு வழங்கப்பெற்றது.

167

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 12] நந்தனவஸ்ரீ மாசிமீ 10—3—53. [இதழ் 4

கவியமுதம்

இன்று எல்லா மேடைகளிலும் - எல்லார் வாயிலும் வாழப்பிறந்தோம் - இன்பவாழ்வு வாழப்பிறந்தோம் என்பதே பேச்சு. இதில் ஏதேனும் உண்மையிருக்கிறதா பார்ப்போம்.

பசித்தவனுக்கு உணவு ருசிக்கும். தாகத்தால் தவித்தவனுக்குத் தண்ணீர்ச் சுவைதெரியும். வெயிலில் அலைந்தவனுக்கு நிழலருமை தெரியும். உழைத்துக் களைத்தவன் கையிலே ஊதியம் இன்பம் அளிக்கும். இந்தநிலையில் இன்பம் எல்லாம் துன்பத்தில் தொடக்குண்டு வாடி வதங்கி உய்யும் வழிதேடி களைத்தவனுக்கே பெருகித்தோன்றும். இது உலகியற்கை. அதுபோல நாம் இந்தப் பிறவியில் ஏதோ சில வேளைகளில் வடிகட்டிய இன்பத்தை நுகருகிறோம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறோம். உண்மையில் அது வடிகட்டிய இன்பந்தானா? என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அதுதான் இல்லை.

இருளும் ஒளியும் கலந்த உலகத்திலே துன்பம் கலவாத இன்பம் ஏது? நாம் உண்ணும் சுவைகளுள் கசப்பும் காரமும் அடங்கித்தானே உள்ளன. அல்லாமலும் சிறு இன்பமும் பெரிதாகத் தோன்றுவது பெருகிய துன்பத்தில் அருகித்தோன்றும் இன்பமேயாம். சோழவளநாட்டிலே காவிரியின் இருமருங்கும் சோலைகளும் ஆற்றின் நீரோட்டமும் இன்பம் தருவதைக் காட்டிலும், பாலைவனத்தின் நடுவிலே பலகாததூரங்களுக்கு இடையில் காணப்படும் உலர்ந்த ஒற்றை மரநிழல் பேரின்பம் தருவதாகும். அதனாலேயே நமது நாட்டு ஞானிகள் உண்டதை உண்டு, கண்டதைக்

கண்டு இன்புறுவதைக் காட்டிலும் பொறிகளை அடக்குதலாகிய துன்பயாத்திரையைப் பலநாள் செய்து சாவா மூவாப் பேரின்பத்தைச் சார்கிறார்கள். இந்த எண்ணங்களை அடிப்படையாகவைத்து அமைந்துள்ள கவிதையைப் பாருங்கள்:—

அடுகரி தொடரவீழ ஐந்தலைநாகம் காண
இடிகிணற்றறுகின் வேரைப் பற்றிநின்றிட வவ்வேரைக்
கடுகவே றெலியும் வந்து கறித்திட அதில் நின்றானுக்கு
இடைதுளி தேன்நக்கு இன்பம் போலும்இப் பிறவியின்பம்.

சிறந்த கற்பனை. ஒருமனிதன் தனிவழியாக அடர்ந்த காட்டில் நடக்கிறான். மதம்பிடித்த யானை ஒன்று துரத்துகிறது. வளைந்து வளைந்து ஓடுகிறான். வழியில் புதர்மூடிய ஒரு பாழுங்கிணறு. உள்ளே விழுகிறான். கிணற்றுக்குள்ளோ அதிசயமான ஐந்துதலைப் பாம்பு உருத்து நோக்குகிறது. கிணற்றைவிட்டுக் கரையேறிவிடவேண்டும் என்ற பரபரப்பு. மேலேயோ யானை. அடியில் பாம்பு. கிணற்றுக் கல்லில் அடிவைத்து ஏறலாம் என்ற யோசனை. கரைகளெல்லாம் இடிந்துகிடக்கின்றன. கல்லிடுக்கில் வளர்ந்து தொங்குகிற ஒரு அறுகம் புல்லின்வேர் இவனுக்கு உயிர்கொடுக்கிறது. பிழைத்தோம் என்ற பெருநம்பிக்கை. யானை ஓடிவிட்டதா என்ற கூர்த்தபார்வை. இவையெல்லாம் இவன் நம்பிக்கைப் பாதைக்கு நல்லுதவிசெய்தன. அறுகம் வேர்களைப்பிடித்துக் கொண்டு ஒருபடி உயர்ந்து ஏறினான். ஒரு எலி பரபரப்பாக ஓடிவந்து அறுகம் வேர்க்கற்றையை நறுக்கிக்கொண்டிருப்பதைப் பார்த்தான். அப்படியே திகில். இருந்த நம்பிக்கையும் அடியோடு இழந்து என்னசெய்வோம் என்று தவிக்கின்ற நேரத்தில் திணறி மூச்சுவிடும்வாயிலே ஒருசொட்டுத் தேன் விழுந்தது. ஆகா! என்ன சுவை! என்ன சுவை! என்று அநுபவிக்கிறான். இதுதான் நமது பிறவியிலே நாம் அநுபவிக்கும் சிற்றின்பம். இதனை உவர்த்து எல்லாவற்றையும் துன்பமயமாக ஆக்கிக்கொண்டாவது நிலைத்த பேரின்பத்தை அடைய முயல்வதுதான் அறிஞன் செய்யவேண்டிய வேலை. இதனை மற்றொருமுறையால் விளக்குவது மணிவாசகம்.

தினைத்தனை உள்ளதோர் பூவினில் தேன்உண்ணாதே
நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தோறும் எப்போதும்
அனைத்தெலும்பு உண்ணெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

என்பது அது. இப்பாடலை எப்பொழுதும் தியானிப்போமாக.

இலக்கியச்சுவை

[ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருவுள்ளத்தில் இருந்து எழுந்த சுவைப்பகுதிகள் இவை. அன்பர்களுக்குப் பெருவிருந்தாம் என்ற நோக்கத்தோடு எழுத நேர்ந்தது. இப்பகுதி சென்றமாதத் தொடர்ச்சியாகும்.]

மநுவேந்தன் ஆட்சியின் சிறப்பு, தன் மகனது குற்றத்திற்கு உரிய தண்டனையாகத் தன் தேர்க்காலில் அவனை அகப்படுத்திய ஒன்றுலேயே நன்றாக விளங்கும். அம்மன்னர்கோன் அவ்வாறு செய்தற்குமுன், தன் அமைச்சரொடு உசாவிய காலத்தில் வெளியிட்ட அவனது உள்ளக்கிடக்கையைத் தெள்ளத்தெளிவித்தவாற்றை அரசியலார் பலரும் அகத்திற் பதியவைத்துக்கொள்ளல் வேண்டும்.

தன் கன்று இறந்ததன்பொருட்டுப் பசு அடைந்த துன்பத்தை மன்னனும் எய்தினான். எய்தியதும் அத்துன்பம் நஞ்சுபோலத் தலைக்கு ஏறிற்று; மனத்தில் வேதனை பெருகிற்று. இவ்வினை விளைந்த வகையை உணரமுடியாது கவல்கின்றான் காவலர் தலைவன். இடரும் இரக்கமும் ஏக்கமும் அவன் உள்ளத்தை நிறைத்தன. கலக்கமும் தெளிவும் மாறி மாறித் தோன்றுகின்றன. என்செங்கோல் என்செங்கோல்? என்னும் வினாவும் தோன்றிற்று. அவ்வினாவே, பிறர்க்கும் பங்குண்டு என்று கூற இடமின்றி மண்ணுண்டு, மன்னுயிர் காத்து, தருமங்களை வளர்க்கும் என்னெறி நன்னெறியோ என்று மாறிற்று. இத்தீநெறி தீர்வழி எவ்வழி என்று கருதிக்கொண்டே பக்கத்தேசென்றுநின்று, இளங்கன்றைக் காணுமல் இரங்கும் தாய்ப்பசுவினது முகத்தைக்கண்டு சோர்கின்றான் அம்மனுநீதிவேந்தன். அந்நிலையில் அவனடைந்த துக்கமோ ஓர் அளவிற்கு உட்படாது.

அதைக்கண்டனர் மந்திரிமார். அவனடி வணங்கிநின்று, ,அரசே! மனத்தளர்ச்சி இதற்கு மருந்தாகாது; பசுக்கொலை செய்தவர்க்கு வேதப்பிராமணர்கள் விதித்த முறையில்

பரிகாரம்செய்து பாபநிவிர்த்தி தேடுவதே தருமம்' என்றனர். அதுகேட்ட வேந்தன் அப்பிராமணர் சொற்படி செய்யும் பரிகாரம், கன்றிழந்து கலங்கும் தாய்ப்பசுவின் நோய்ப் பெருக்கத்திற்கு வாய்ப்பான மருந்தாகுமோ? என்மகனை யான் இழக்கின்றேன் என்ற எண்ணத்தால் நீங்கள் இவ்வாறு சொல்லுகின்றீர்கள்போலும்! இவ்வநீதிக்கு நான் சம்மதித்தால். அது தருமதேவதை என்னைப் புறக்கணிக்கவும் இதுவரை என் முன்னோர் ஓம்பிய செங்கோலாட்சி கொடுங்கோலாட்சியாய்த் தாழ்வுறவும் வழிதேடிக்கொண்டதாகும்.

அத்தருமத்தைக் காக்கும் அரசனே மண்ணுளும் மன்னனுவான். தருமம் சலிக்க ஆள்வோன் அரசனுவானோ? ஆகமாட்டானே! உயிர்களைத் 1. தன்னாலும், 2. தன் சேனைகளாலும், 3. தன் பகைவராலும், 4. திருடர்களாலும், 5. விலங்கு முதலிய மற்றைய உயிர்களாலும் உண்டாகும் அச்சம் ஒழித்தும் அறத்தைக் காத்தும் நிற்பவனே அரசாள்வோன் எனப்படும் சிறப்பிற்கு உரியவன்.

''மாநிலங்கா வலனுவான் மன்னுயிர் காக்குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னால் தன்பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்தும்தீர்த் தறம்காப்பான் அல்லனோ!''

என்மகன் செய்த பாதகத்திற்கு வேதவிதியைத் தேடி ஒரு பரிகாரத்தைமட்டும் செய்வது. பிறிதோருயிரைப் பிறர் கொன்றால், அக்கொலைக்குற்றத்திற்குக் கொலைத்தண்டனையே விதிப்பது, இதுதான் மனுமுறைமை, மந்திரிகள் வழக்கு நீதியொடுபொருந்திய வழக்காதல் இவ்விதத்தில்தானே? மனுவம்சத்தின் ஆட்சி என்னால் ஒழிந்தது என்ற ஒரு பெயரை நிலைநாட்ட இதனினும் வேறுவழி வேண்டுமோ? என்றனன். இவ்வாறு அரசன் இகழ்ந்துபேசியபின்னும் மந்திரிகள், இதுபோல இவ்வுலகில் முன்னும் நடந்தது. கொல்வித்தல் மரபன்று; வேதவிதிப்படி பரிகாரம் செய்வதே தொன்று தொட்டுவரும் நெறி என்றார்கள்.

அப்பொழுது, மந்திரிமார்முகத்தைநோக்கி, மனுவேந்தன் உண்மைத் தன்மையை ஆராய்ந்துணர்ந்தவனுதலின், நீங்கள் பழுதுசொன்னீர்கள் என்று சினந்து,

" அவ்வுரையில் வரும்நெறிகள் அவைநிற்க ; அறநெறியின்
செவ்வியஉண் மைத்திறம்நீர் சிந்தைசெயா துரைக்கின்றீர் !
எவ்வுலகில் எப்பெற்றம் இப்பெற்றித் தாம் இடரால்
வெவ்வுயிர்த்துக் கதறிமணி எறிந்துவிழுந் தது? விளம்பீர் ! "

என்ருன். அம்மட்டில் அமையாமல்,

" திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன் "

என்ற திருநாவலூர் மன்னர் திருவடிப்பொருள் நினைவுற்று, 'திருவாரூரில் பிறந்த உயிரெல்லாம் சிவனடி நீழலைப் பெறத் தக்கவை. ஆன்கன்றும் ஆரூரிற் பிறந்த சிவபுண்ணியப் பேற்ருல் தியாகராசப்பிரான் திருவடிநீழலை அடைதற்குரியது. அது தேர்க்காலில் சிக்கி மாயும் பாவத்துக்கு ஆளானுன் என் மகன். ஆதலின், அவனை அங்ஙனம் மாய்விப்பதே துணிபொருள். இத்தாய்ப் பசுவின் துயரத்தைத் தொலைக்கமாட்டாதநான் இதுபெற்ற துன்பத்தை யானும்பெற்று உலைவதே இப்பொழுது செய்யத்தக்க கருமம்' என்று துணிந்தான். இவ்வாறு துணிந்த அப்பொழுதே மனுவேந்தன் மனத்தைப் பற்றிய அக்கொலைப்பாவம் அகன்றுவிட்டது. அதனுல், அவன் முன்போல் அநகன் (பாவம் இல்லாதவன்) ஆய்விட்டான். அவ்வுண்மையைத் தெய்வச் சேக்கிழார் சுவாமிகள்,

" அநகன் அரும்பொருள் துணிந்தான்
அமைச்சரும் அஞ்சினர் அகன்ருர் "

என்று அருளினுர்கள். இத்துணிபொருள் எளிதானதன்று. இதற்கு முன்னும் யாண்டும் யாரும் துணியாதபொருள். அதனுல் **அரும்பொருள்** என்று குறிக்கப்பெற்றது. துணிந்த செயல் அரசனது. அச்செயலின்பயன் அமைச்சரிடத்தில் அச்சமும் அகற்சியுமாய் விளங்கிற்று. தன் மகனிடத்தில் யாதாக விளங்குகின்றது நோக்குங்கள்.

அவ்வாறு துணிந்த மனுவேந்தன், மந்திரி ஒருவனை அழைத்து, மகனையும் அழைத்துவிட்டு, இவனை அத்தெருவில்—அவ்விடத்தில்—அத்தேர்க்காலில் ஊர்க என்று கட்டளையிட்டான். அவனும் அஞ்சி அகன்ற மந்திரிகளைப்போலச் செய்திருக்கலாம். அவ்விதம் செய்யாமல், முன்பு அவ்விடத்தை விட்டு அகன்றான்; பின்பு உடலைவிட்டு அகன்றான்.

இன்னும் மந்திரியை ஏவுதலில் மன்னன் மனம் முனையுமோ? தானே தன் குலக்கொழுந்தைக்கொண்டு குறித்த இடத்தை அடைந்தான்; தன்குலத்திற்குத் தனிமகன் என்றும் கருதினானல்லன்; தருமநெறியைத் தவறாமல் காத்தல் ஒன்றே குறிக்கோளாகக்கொண்டவனன்றோ மன்னன்.

"ஒருமைந்தன் தன்குலத்துக் குள்ளான் என்பதும் உணரான்
தருமந்தன் வழிச்செல்கை கடன்என்று தன்மைந்தன்
மருமந்தன் தேர்ஆழி உற ஊர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோ மற்றெளிதோதான்."

இங்குப், பெரியபுராணத்தில் காணப்படாத ஒன்று மெய்கண்ட சாத்திரவுரையுள் குறிக்கப்பட்டுள்ளது. போற்றிப்பஃறொடை ௫௧, ௫௨ ஆம் கண்ணிகளின் உரையில், "**தேரிலே தாய்ப்பசுவை வைத்து ஊர்ந்து கொன்றது மகனை யமன் பிடித்து வருத்தாதபடிக்குச் செய்த கிருபையே**" என்று இருக்கின்ற ஞானிகளின் திருவார்த்தை சிரமேற்கொண்டு போற்றத்தக்க சிறப்புடையது.

இத் தண்ணளிவெண்குடைவேந்தன் செயல்கண்டு தாங்காத மண்ணோரும் கண்மாரிபெய்தனர்; விண்ணோரும் மலர்மாரி பொழிந்தனர். வீதிவிடங்கப்பெருமானார் வீதியில் இராமல் வேறிடத்தில் மட்டுமோ இருந்தார்? முன்னவன்முன் நின்றவண்ணம் எவ்வண்ணம்? பின்வரும் வண்ணமே பார்மின்!

"சடைமருங்கில் இளம்பிறையும் தனிவிழிக்குந் திருநுதலும்
இடமருங்கில் உமையாளும் எம்மருங்கும் பூதகணம்
புடைநெருங்கும் பெருமையும்முன் கண்டரசன் போற்றிசைப்ப
விடைமருவும் பெருமானும் விறல்வேந்தற் கருள்கொடுத்தான்."

"அந்நிலையே உயிர்பிரிந்த ஆன்கன்றும் அவ்வரசன்
மன்னுரிமைத் தனிக்கன்றும் மந்திரியும் உடன்எழலும்
இன்னபரிசானான்என் றறிந்திலன் வேந்தனும், யார்க்கும்
முன்னவனே முன்நின்றான் முடியாதபொருள் உளதோ?"

முன்னவன் முன்னின்ற வகையை இப்புராணத்தின் 45, 46 ஆம் பாக்களால் ஆசிரியர் உணர்த்திய திறம் மெய் அருளாளர் அன்றிப் பொய்ப்பொருளாளர் அறிவது அரிது.

இக்காலத்துமக்கள், தம்மைப் பெற்றோரிடம் எவ்வாறு ஒழுகுதல் வேண்டும்? உயிர்த்தெழுந்த மகன், தந்தையாகிய மனுவேந்தன் பாதத்தில் விழுந்து வணங்கியதையும் அவ்வழக்கம் திடீரென வந்ததன்று என்பதையும் அக்காலத்தாரே அறிவர். இக்காலத்தார் பெரியபுராணத்தையும் கம்பராமாயணத்தையும் அன்னோரன்ன பழம் பனுவல்களையும் ஓதி உணர்ந்தால்தான் அறிவர். அறிந்தாலும் தம் ஒழுக்கமாக அமையப்பெறுதல் அரிது.

"அடிபணிந்த திருமகனை ஆகமுற எடுத்தணைத்து
நெடிதுமகிழ்ந் தருந்துயரம் நீங்கினன் நிலவேந்தன்"

இத்தகைய துயரம் நீங்குவது மிகவும் அரிது; துயரமும் அரியது; அதன் நீக்கமும் அரிது. அவ்வருமைச் செயல்கள் ஆண்டவன் அருளால் எளிமைச் செயல்களாயின சிவபக்தி மிக்க சக்கிரவர்த்திக்கு.

"மடிசுரந்து பொழிதீம்பால் வருங்கன்று மகிழ்ந்துண்டு
படிநனைய வரும்பசுவும் பருவரல் நீங்கியதன்றே"

உயர்திணையாகிய மன்னன் மகிழ்ச்சியும் அஃறிணையாகிய பசுவின் களிப்பும் சேக்கிழார் திருவாக்கில்வந்த வேறுபாட்டை நோக்கியுணர்தல்வேண்டும்.

திருவாரூர்ப் பூங்கோயில் அமர்ந்தபிரான் மனுவேந்தனுக்கு வீதியிலே அருள்கொடுத்த பெருங்கருணைத்திறத்தைக் கண்டு, ஏழுலகும், என்றும் ஆண்டவன் தன் அடியார்க்கு எளிவரும் பெருமையை எடுத்து ஏத்தும். இவ்வாறு தருமநெறியில் அளவில்லாத அடியார்க்கு அருள்செய்துகொண்டிருந்தார் தியாகராசப்பெருமானார். அவர் இப்பொழுது மண்ணை ஆள்வோர்க்கு ஏன் ஒருவாற்றானும் அருள்செய்யாதிருக்கின்றாரோ? காரணம் தெரியவில்லை. அவனே உணர்த்தினால் உணரலாம்.

—முத்து. சு. மா.

174

திரு. தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான் அவர்கள்

தமிழருக்கு....

தருமபுர ஆதீனம் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டின் நிறைவுநாள் 14—6—52 அன்று நடந்த கவியரங்கில், அரங்கின் தலைவராக அமர்ந்து அரங் கேற்றிய அருங்கவிகள்.

தருமபுர மதனில் தலையாய கவியரங்கில்
அருமையொடு கூடி அமர்ந்துள்ள பெரியோர்க்கும்
ஆட்சிப்பீ டத்தமர்ந்து அருள்புரிந்து அவனியிலே
மாட்சிபெறும் மாசந்நிதானம் அவர்களுக்கும் நமஸ்காரம்.

ஆங்கில நாட்டினிலே அணிஅணியாய்க் கூடியுள
பாங்குபெறும் கூட்டமொன்றைப் பரபரப்புடன் கலைக்க வேண்டுமெனில்
கோல்கொண்டு சாடுகின்ற கொற்றமுடைப் போலீஸோ
வேல்கொண்டு தாக்குகின்ற வீரர்களோ உதவார்;
சுடுகின்ற நீரோடு சுருளுமொரு ஹோஸ்பைப்பும்
விடுகின்ற வேகமெலாம் வீணுக வேபோகும்.

கூட்டமதைக் கலைக்க குறுக்குவழி ஒன்றுண்டு
பாட்டொன்று வருகுதென்று பகர்ந்திட்டால், மக்களெலாம்
ஆட்டம்போட் டக்கணமே அவ்விடத்தை விட்டகல்வர்
கூட்டமதும் கலையும், குறிக்கோளும் நிறைவேறும்.

இப்படிச்சொன் னலதுவோர் கதையல்ல என்னுடைய
செப்படிவித் தைப்புலமை செய்கற் பனையுமல
அறிஞர் பெருமகனும் ஆர்னல்ட் பென்னட்தான்
கூறுகின்ற ஓர்உண்மைக் குறிப்பதனை உணர்ந்திடுவீர்!

தருமபுர ஆதீனத்து தலைவர் அருட்டிறனல்
பெரும்புலவர் பலர்கூடி பேராவ லுடன்நடத்தும்
திருநெறிய தெய்வத் திருமுறைமா நாட்டினிலே,
ஒருநாள்க் கவியரங்கம் உண்டென்று குறிப்பிட்டு,
உங்களையெல் லாம்அழைத்து இங்கே இருத்திவைத்து
எங்களையே கவியரங்கில் ஏறுங்கள் என்றுசொலும்
மாசந்நி தானத்தின் மனதில்உள்ளதை யறியேன்.

என்றாலும்,

நேசத்தோடே வந்து நெருங்கி உட்கார்ந்துள்ள
உங்களை இவ் விடமிருந்து ஓட்டுவதென் நோக்கமல,
தங்கி இருந்து, தலைவர் அருள்பெற்றுப்
போவதன்முன் என்னுடைய புன்மொழியை யும்ஏற்று
ஆவனவே செய்வதற்கு அருளிருந்தால் களிப்புறுவேன்.

நீவிரெலாம்,

கவியென்றால் காதலிக்கும் கனிந்த உளமுடையீர்!
புவிதனிலே போற்றுகின்ற புலவர் பலர்அறிவீர்!
சொல்லினிமை, பொருள்ஆழம், சொல்லரிய இசைநயத்தோடு
எல்லாம் நிறைந்திருக்கும் என்கவியில் என்றுசொலி
உம்மையெலாம் ஏமாற்ற ஒருசிறிதும் விரும்பஇலை
உம்மிடத்தில் ஒருவார்த்தை உளம்திறந்து சொலவிருப்பம்.

ஓடாதீர்! சபையோரே! உங்களுக்குச் சொல்லுவதால்,
நாடறியச் சொல்லுமொரு நலம்வாய்க்கும் எனநினைத்து.
இற்றைக்குத் தமிழுலகம் இருக்கின்ற நிலைஎண்ணி,
எற்றைக்கும் ஏற்றமுறும் இனிய புகழ்பெறவே
கற்றறிந்த தமிழருக்குக் கழறுவேன் சிலவார்த்தை;
பெற்றமுடைப் பெரியீர்!என் பேச்சினுக்குச் செவிசாய்ப்பீர்.

2

மொழியில் சமயத்தில் முன்னேறும் கலை அறிவில்
விழிப்படைந்து நாம்செய்ய வேண்டுவது என்னவென்று,
உங்களிடம் சொல்வதற்கு உவகை பெரிதுண்டு;
தங்களுக்கும் தெரிந்ததுதான்; தருக்கோடு பேசவிலை.

தமிழ்மொழியின் பெருமையினைத் தாரணியெ லாம்அறிய
அமிழ்தனைய தமிழ்ப்பாவில் அறிஞர் உரைத்துள்ளார்;
தொண்டர்தம் நாதனையே தூதுவிட்ட பெருமையொடு
தண்டமிழின் தெய்வதத்தால் தமிழ்மறைகள் பெற்றதையும்,
மழலை மொழியாலே மறைக்கத வினைத்திறந்து,
முதலையுண்ட பாலனையும் முன்வரவே தானழைத்து,
நீருக் கெதிராக நீள்ஓலை தான்செலுத்தி,

126

பாருக்குள் தீயினிலே பச்சோலை இட்டெடுத்து,
இன்னும் இதுபோன்று எத்தனையோ சாதனைகள்
பன்னரிய தமிழ்மொழியில் பாவித்தோம்; இதுவெல்லாம்
பண்டைப் புலவர்சொலும் பழங்கதையே என்றொதுக்கி
சிண்டைப் பிடித்தசைத்துச் சிரிக்கின்றார் இன்றுசிலர்.

அன்னவரும் தமிழ்மொழியின் அருமை தெரிந்திடவே
என்செய்ய வேண்டுமென்று எண்ணிடவும் வேண்டாமோ?
மக்களென்றால் மொழியுண்டு; மொழிகளுக்குத் திறனுண்டு;
ஒக்க உணர்ந்திடலாம் உன்னதங்கள் கண்டிடலாம்.

என்றாலும்,

கனிபோலும் சுவையுடைய கவிதைச் சுகம்நல்கி,
இனிதாக மாந்துதற்கு எளிதாய் அமைந்துள்ள
நமதுதமிழ் மொழியினைப்போல் நானிலத்தில் இல்லையென
அறுதியிட்டுக் கூறுகின்றார் அறிஞர் பெருமக்கள்.

இங்கிலையில்,

கவிதை இதுஎன்று காணக் கிடைத்தோமா?
கவிதைச் சுவைஅறியும் காதுகளைப் பெற்றோமா?

ஆழமொடு சுழற்சி அருங்கவிக்கு வேண்டுமென்றோம்
சூழல் அறியவொணாச் சுழிப்பில் நிலைஇழந்தோம்;
கவியென்றால் முடிச்சுபல கட்டாயம் வேண்டுமென்று
கவிக்கிலக்க ணம்வகுத்து காலமெலாம் கழித்தோம்;
இலக்கணத்தை உரலிலிட்டு, இடித்துப் பொடியாக்கி
கலக்கிக் குடித்துசுவைக் கவியென்று பேருமிட்டு,
பிலக்கணங்கள் பாடி பித்தம் தெளியாது,
துலக்கமிலா அறிவாலே துயர்செய்தோம் மக்களையே.

இம்மட்டோ?

யமகத்தோடு திரிபு யாண்டுளது எனத்தேடி,
சமர்புரிந்து அத்தோடு சாதுரிய வெற்றிபெற்று,
இருப்புக் கடலையினை இனியசுவை யுடையதென
விருப்போடு தானருந்தி, விண்ணாளம் பேசிவந்தோம்;

உண்மைக் கவிதையினை உணராது ஏமாந்தோம் ;
ஒன்மை அறிவில்லா ஊமையராய் வாழ்ந்தலுத்தோம் ;
கவிதைக் கிலக்கணத்தை கவிமணியே கூறுகின்றார்
புவிபோற்றும் ரஸிகமணி போற்றுகின்றார் அவர்உரையை.

உள்ளத்திலே பிறந்து, உணர்ச்சியிலே உருவாகி,
தெள்ளத் தெளிந்ததமிழ் தெவிட்டா இனிமையினை
அள்ளிக் கொடுக்கின்ற ஆர்வ மதுநிறைந்தால்

அதுதான் ;

விள்ளற் கரியதொரு வியன்கவிதை என உரைத்தார்.

இந்த உரைகல்லில் இனிப்படிக்கும் பாடல்களை
முந்தி உரைத்துணரும் மூதவு பெறவேணும்.

நல்ல கவியறியும் நாட்டம் உடையரெலாம்
கல்வியிற் பெரியவனும் கவிச் சக்ரவர்த்தியுமாம்
கம்பனது காவியத்தில் களித்துத் திளைத்திடணும்
பம்பும் உணர்வோடு பாத்திரங்களை நடத்தி
தெம்போடு பேசுகின்ற திறனைத் தெரிந்திடணும்.

வன்ன மொழிபேசி வார்த்தை மணிகோத்து
பின்னிப் பிணைத்திசையைப் பிறப்பிக்கும் பெருமையுடை
முத்தமிழின் திறம்அறிய முத்தொள்ளாயிரத்தோடு,
நத்துபுகழ் நந்தியெம்மான் நல்ல கலம்பகத்தை,
சயங்கொண்ட கவிஞனவன் சாற்றும் பரணியதை,
நயங்குறையா வளத்தோடு நல்ல தமிழாலே
கூறுகின்ற குற்றாலக் குறவஞ்சிப் பாடலினை,
ஏறுபோல் நடைபோடும் எழில்மிகுந்த பள்ளோடு
இன்னும் இதுபோன்று எத்தனையோ காப்பியங்கள்
மன்னும் தமிழ்மொழியில் மலர்ந்திடநாம் செய்துவிட்டால்
கவிதை வளம்பெருகும், காதல் தமிழிடத்தே
அதிகம் வளர்ந்தோங்கும் ஆணையிட்டுக் கூறுகின்றேன்.

இதுதவிர,

எளிமையொடு இனிமையதே எம்முடைய லக்ஷியமென்று,
களிபேருவகையுடன் கட்டுரைத்துச் சொல்லிவிட்டு,

"நான்போந்த நீராவித் தொடர்வண்டி நள்ளிரவில்
நான்மாடக் கூடலையே நணுகிற்று" என்றெழுத
முற்படும்நம் நண்பர்கட்கு மூளையில்லைன் கோளாறோ?
எற்றுக்கு இவர்தமிழை இந்தவதை செய்கின்றார்?

"கூலக் கடைகுறுகி கூறைஒன்று கொண்டிடவே
மேலைப் பொழுதொருநாள் மேவிப் போந்தேன்" என்று
சொல்லுக்கு உயிரைவிட்டு, சோதாவாய்ப் பதங்களொடு
மல்லுக்கு நின்று, மடிபிடித்து, இழுத்துவந்து
வார்த்தைச் சிலம்பத்தால் வாகாகப் பேசுகின்ற
மூர்த்திகளோ முத்தமிழை வளர்க்கின்ற பெருமக்கள்.

இப்படியே,

வழக்கொழிந்த சொற்களினால் வசனமதை உருவாக்கும்
கழைக்கூத்தன் வேலையெலாம் கட்டி வராதினிமேல்
உள்ளத்தைத் தொடுகின்ற உணர்ச்சி யதுநிறைந்து,
பள்ளத்தில் பாய்கின்ற பனிநீரின் தெளிவோடு
வசனமொடு கவிதை வழக்கில் உருவானால்,
விசனமிலா வாழ்வுவரும்; விம்மி மொழிவளரும்.

3

மொழிசார்ந்தே வளர்ந்துளது முன்னோர்சொல் நம்சமயம்;
அழியாத பெருமையது அவர்கண்ட முடிபுகளும்.

யாதும்நம் ஊரதுவே யாவரும்நம் கேளிர்கள்தாம்
ஓதுபெரும் அறிஞரெலாம் உணர்த்தியதும் இதனைத்தான்
அன்பினையே சிவம்என்றார்; அருளினையே சக்திஎன்றார்;
துன்பினையே துடைப்பதற்குத் தூயநெறி பலசொன்னார்;
பதிஎன்றார்; பசுஎன்றார்; பாசம்இவர் இடைகிடந்து
விதிக்கும் அறத்துக்கும் விளைக்கின்ற போரிடையே
பற்றுதற்குக் கொழுக்கொம்பு பரமன் அடியென்றார்;
சற்றுமனம் சலியாமல் சாதனைகள் பலசெய்தார்.

இப்படியே,

அன்புநெறி உணர்த்தி, அருள்வழியே செலுத்தி,
பண்புடைய மக்களையே, பாரில் பெருக்கிவைத்தார்;

ஆவுக்கும், அந்தணர்க்கும், யாவர்க்கும், எளியவர்க்கும்,
தேவர்க்கும் வாழ்வளிக்கும் தெய்வநெறி யதுவே
அற்றைத் தமிழருடை அழியாத செல்வங்கள்.

ஆனால்,

இற்றைத் தமிழ்நாடு இருக்கின்ற நிலையெண்ணில்,
அந்தோ பரிதாபம்! அமைந்துள்ள சமுதாயம்;
நொந்தே மாய்கின்றார்கள் நூற்றுக்கு எண்பதின்மர்;
ஆலயங்கள் தாமெதற்கு? அபிஷேகங்களெதற்கு?
கோலங் கொடிகளுடன் கொட்டுமுழக்கம் எதற்கு?

என்றெல்லாம்,

கேள்விக்கு மேல்கேள்வி கேட்பார் தொகைபெருகி,
ஆள்களையே மருட்டுகின்றார் அறிஞரொடு அண்ணாக்கள்.

இவர்க்கெல்லாம்,

"ஓரும் வேதாந்தத்து உச்சியிலே பழுத்தஒரு
ஆராத இன்பக் கனிதான் எம்சித்தாந்தம்"
என்றுமட்டும் உரைத்து இனியவரை நம்பக்கல்
கொண்டுவர முடியுமென்று கூறிடவோ துணிவில்லை;
சித்தாந்த சாத்திரத்தின் சிறந்த கருத்துக்கள்
நித்தம்நம் வாழ்விலே நினைப்பூட்டும் வகையினிலே
நம்சமயப் பிரசாரம் நடந்தால்ப் பலனுண்டு;
வம்புக்காய் வாயளந்து வாழ்நாள் கழித்துவிட்டு,
ஆண்டுக் கொருமுறையே அழகாகப் பந்தலிட்டு,
பாண்டுவாத் தியமுழங்க பல்லாண்டு பாடிவிட்டால்

போதாது.

பன்னிரண்டு திருமுறையைப் பதிப்பித்தல் நல்லதுதான்.

என்றாலும்,

முன்னேறும் வகையினிலே முதற்படிதான் அச்சேவை.

இதுதவிர,

அறிவை வளர்க்கின்ற அறவுரைகள் தம்மோடு
சிறிதேனும் இதயத்தைச் செம்மைசெய் யும்முறையை
கையாளத் தெரிந்தால்தான், காரியங்கள் கைகூடும்;
பையச்செய் வோமென்று பலநாள் கழிந்ததன்பின்,
இதற்கும் வழிஉண்டோ என்றேங்க வேண்டாங்காண்
பதருது செய்திடுவோம்; பலஉண்டு சாதனங்கள்
பக்திச்சுவை வளர்க்கும் பரமார்த்த சேவையினில்,
சக்தியுடை மொழிகளிலே தமிழேதான் தலைநிற்கும்;
தேவாரப் பாகோடு திருவாசகத் தேனை
நாவார உண்பதற்கு நல்லோர் பலர்வேணும்;
பூமாலை வாடிவிடும், பொன்மாலை மணமில்லை.

ஆதலினால்,

பாமாலை கொண்டீசன் பதம்பணிந்த அப்பருடன்;
பாலமுதம் உண்டுதமிழ் பாடல்களைப் பாடிஇந்த
ஞாலம் புகழவந்த ஞானசம் பந்தருமே;
கொன்றை அணிந்தம்பலத்தில் கூத்தாடும் ராஜனுக்கு
வன் தொண்டனாக வாய்த்ததொரு சுந்தரரும்;
கல்லைப் பிசைந்து கனியாக்கிச் செந்தமிழில்
சொல்லை மணிமணியாய் கோத்த மணிவாசகரும்;
எல்லோரும் இனிதாக இதயத்தைத் தொடுகின்ற
நல்லபாமாலை கொண்டு நம்பனையே பாடியுளார்.

இம்மட்டோ?

பக்தியினைச் செய்யுளிலே பக்குவமாய் தான்குழைத்து,
சித்தம் தெளிவாக்கி சிவமாக்கும் சேக்கிழாரின்
தெய்வம் மணக்கின்ற தேனினிய செய்யுள்கள்தாம்;
செய்கின்ற சேவையதே செல்கதிக்கு வழிகாட்டும்.

இன்னதனை எல்லாம் இனிதாய் எடுத்துரைத்தால்
ஒன்னலரும் நம்மோடு ஒன்றியே சேர்ந்திடுவர்.

அப்போது,

மொழியோடு சமயமுமே முன்னேறும் மூடருமே
வழிபற்றி நம்பின்னே வந்து மகிழ்ந்திடுவர்.

4

மொழியோடு சமயத்தை மூண்டபெருங் காதலொடு
அழியாமல் காப்பதற்கு ஆனவகை செய்வதன்முன்
நம்நாட்டுக் கலையெல்லாம் நலியாமல் காப்பதுதான்
நம்முடைய பணியெனவே நான்சொல்வேன் : நீர்உணர்வீர்

பொன்னோடு பொருளினையும் பொதியாய்க் குவிவித்து
விண்ணினையே தாக்குகின்ற விமானமொடு கோபுரங்கள்
மாடங்கள், மண்டபங்கள், மாட்சிபெருங் கோவில்கள்தாம்
நாடெங்கும் ஆக்கியதை நாமறிவோம்; உலகறியும்.

ஆலயங்களில்த் தானே அழகான மூர்த்திகளும்
சாலச் சிறப்புடைய சரித்திரக் கல்வெட்டுகளும்
எண்ணற் றவையுண்டு, இந்தத் தமிழகத்தில்
வன்னப் பொலிவோடு வளர்த்தார்கள் நம்முன்னோர்.

நெல்களஞ்சி யம்மான நிமிர்சோழ நாட்டிடையே
கலைக்களஞ்சி யம்மதுவாய் காணுகின்ற கலைக்கூடம்
சொல்லால் உருவாகும் சொர்ணக் கவியினைப்போல்
கல்லால் இழைத்துள்ள காவியப்பூங் கோவில்களாம்;
சாட்டிநிற்கும் அண்டமதை சாட்டையிலாப் பம்பரமாய்
ஆட்டிவைக்கும் அண்ணலவன் ஆடுகின்ற ஆட்டமொடு,
மாதிருக்கும் பாதியனாய் மண்மேல்பிக் ஷாடனனாய்,
ஆதியொடு அந்தமில அண்ணாமலை உருவாய்,
நின்றதிருக் கோலமெலாம் நிலஉலகோர் காண்பதற்கு
என்றும் அழியாத எழில்உருவிலே சமைத்து
கல்லினிலும் செம்பினிலும் கடவுளையே காட்டுகின்ற
கலைஞர் புகழ்பாடி கட்டியங்கள் கூறிடலாம்.

என்றாலும்,

கங்கைகொண்ட சோழனது கனவில் உருவான
கங்கையணி வேணியனின் கலைக்கோவில் பொலிவிழந்து,
ஆராத னைக்குரிய அழகான கற்சிலைகள்
தாரா சுரத்தினிலே தளர்ந்த நிலைஎய்தி,
பண்டைப் பெருமையுடை பழையாறைக் கோயிலிலே
இண்டைச் செடிமுளைத்து எல்லிழந்து நிற்பதெலாம்,
நம்தம் கலைஆர்வம் நலிந்ததற்குச் சான்றுகளாம்;
இம்மைப் பிறப்பினிலே இந்தப் பழிஅகல
அன்னவைகள் அத்தனையும் அழிந்து போகாவாறு,
சொன்னம்போல் காப்பாற்றி சொக்கமொடு பேணுவது
நம்மால் முடியாது.

அதுதான்

அறம்வளர்க்கும் பீடத்தில் அமர்ந்தமட அதிபதிகள்,
திறம்படவே செயவேணும் திறலான காரியமே!

இந்தப் பணிபுரிந்து எங்கும் புகழ்சிறக்க
நந்தாத ஆவலுடன் நாமவரை வேண்டிடுவோம்.

இப்படியே,

இன்னும் சிலநேரம் என்னென்ன வோபேசி
துன்னும் துயருறுத்த துணிவில்லை எனக்கினிமேல்.

ஆதலால், தமிழர்களே! அன்புடைய பெருமக்காள்!

நான்,

காதலால் உரைத்ததெலாம் கருத்தில் நிறுத்திவைத்து
பூதலத்தில் தமிழரெலாம் புகழோடு வாழ்வதற்கு
ஆதரவு தான்அளிப்பீர்; அடியேன் வருகின்றேன்.

182

சேக்கிழாரும், சேயிழையாரும்

வித்துவான், திருமதி. குழந்தையம்மாள்; கோவை.

மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக் கொழுந்து வளைக்கைமானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளி னாலே
இருந்தமிழ்நா டுற்றஇடர் நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் திருநீறு பரப்பி னாரைப்
போற்றுவார் கழலெம்மால் போற்ற லாமே.

மண்ணுலகாதி விண்ணுலகங்களில் பெண்ணுலகு ஏற்றம்பெற்றதென்று ஓதவும் சைவசமயத்தினுடைய நுண் கருத்துக்களையெல்லாம் உலகறியச் செய்யவும் தோன்றிய பெண்மணிகள் பலர். முதற்கண் மங்கையர்க்கரசியார் வரலாறு காணுதற்குரியது.

தெய்வமணக்கும் கவி வல்ல சேக்கிழார்பெருமான் அம்மையார் வரலாற்றை எண்சீர் விருத்தங்களாகப் பாடினார். இதனால் எண்ணத்தகுந்த சீருடையவர் மங்கையர்க்கரசியார் என்பது தெளிவாம். முப்பத்திரண்டு சீருடைய பாடல்களா லேயே பாடப்பட்டமையால் பெண்ணுக்கிருக்கவேண்டிய முப்பத்திரண்டு இலக்கணமும் பொருந்தியவர் என்பதும் வலியுறும். அம்மையாருடைய வரலாற்றை, இரண்டரைப் பாடல்களால் போற்றின்மையால் யார் உளங்கலந்து இரண் டறப் பாடுகிறார்களோ அவர்களுக்கு அம்மையாருடைய திருவருட்பேறும் கைவரப்பெறும் என்பது தொனிப்பொரு ளாக அமைந்திருக்கிறது.

சேக்கிழார் பெருமானும் மங்கையர்க்கரசியார் என்று வாளாகூறாது தனியரசி என்று கூறினமையால் மங்கை யருள் ஒப்புயர்வற்றவர் என்பதும், என்தெய்வம் என்று போற்றாது எங்கள் தெய்வம் என்று உளப்பாட்டுத்தன்மைப் பன்மையில் கூறினமையால் வருங்கால அடியவர்கூட்டத்தை யும் உய்விக்கும் பேறுபெற்றவர் நமது அரசியார் என்பதும்

தெளிவாகும். வளவர்குலக்கொழுந்து என்று அடைமொழி யின்றிக் கூருது திருக்குலங்கொழுந்து என்று போற்றினமை யால் கண்டாரால் விரும்பப்படும் தன்மைநோக்கம் அமைந்த அழகும் செல்வமென்னும் பொருளமை திருவும் வீடுபேறு என்னும் பொருள்மை திருவும் ஒருங்கே அமையப்பெற்றவர் அம்மையார் என்பது தெளிவாகும்.

இனி மற்றவுறுப்புக்களைப்பற்றிக்கூருது வளைக்கைமானி என்று பெண்ணணியில்சிறந்த வளையல் போற்றப்பெற்றமை சிறப்புடைத்தாகும். இதனையே ஞானசம்பந்தப்பெருமானும் திருவாலவாய்த்தேவாரத்தில்,

மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை வரிவளைக்கை மடமானி

என்று போற்றினர். தன்னிலைமையில் தாழாமையும் தனக்கூழ்வினையால் தாழ்வுவந்த காலத்து உயிர்வாழாமை யுமாகிய மானம் அம்மையாரிடம் பொதிந்துகிடந்தமை புல னுகும். தான் பிறந்த குடியில் கடைப்பிடித்துவந்த சைவ வாழ்வுக்குத் தாழ்வுவராமல் காத்த பெருமாட்டியன்றோ எங்கள் அம்மையார். தென்னர்குலப் பழிதீர்த்த என்று சேக்கிழார்பெருமான் போற்றக் காரணம் "நல்லாரொருவர் உளரேல் அவர்பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை" என்றாற்போல் கூன்பாண்டியன் ஒருவன் பழிதீர்த்ததுமட்டும் அன்றி, தென்னர்குலத்திற்கே உரிமையாம் பழியையும்தீர்த்து வைத்தவர் என்பது தெளிவாம். மேலும் தமிழ்நாடுற்ற இடரைநீக்கித் திருநீற்றின் ஒளியைப் பரப்பியவர் என்பதை யும் "மந்திரமாவது நீறு" என்று போற்றித் தீராதவல்வினை தீர்க்கும் மருந்தாக உதவியதையும் புலனுக்கும். இன்னும் சேக்கிழார்பெருமானே ஞானசம்பந்தப்பெருமான் காட்சியில் அம்மையாரை அறிமுகப்படுத்தும்போது,

சென்ற காலத்துப் பழுதிலாத் திறனும்
இனி எதிர்காலத்தின் சிறப்பும்
இன்று எழுந்தருளப் பெற்ற பேறிதனல்
எற்றைக்கும் திருவரு ளுடையேம்.

என்று போற்றினர்.

இறைவியினுடைய திருமுலைப்பாலுண்ட ஞானசம்பந்தப் பெருமான் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் பெற்று, பவமதனை யறமாற்றி, கலைஞானம் பொலியப் பாடிய பாடலிலே பாடினமையொன்றே அம்மையாருடைய பெருமையை விளக்கும். இன்னும் சேக்கிழார்பெருமானே "தென்னாடு விளக்கும் சீர் விளக்கு" என்று போற்றினர். விளக்கு ஏற்றியவுடனே இருள் நீங்கி ஒளி பரவுவதுபோல, அம்மையாருடையதோற்றம் தமிழகத்திலே புறச்சமய இருளை நீக்கிச் சைவஒளியைப் பரப்பினமை தெளிவாகும். இத்தகைய பெண்ணினல்லாளின் திருவடியைச் சிந்தைவைத்திறைஞ்சி, காரைக்கால் புனிதவதியார் திறத்தையும் நோக்குவாம்.

காரைக்கால் புனிதவதியார்.

இறைவனால் 'அம்மையே' என்று அழைக்கப்படும் பேறு பெற்றவர் இவர். இதனைச் சேக்கிழார்பெருமான் "வருமிவள் நம்மைப்பேணும் அம்மைகாண்" என்றார். நம்மையென்று உளப்பாட்டுத் தன்மைப்பன்மையில் கூறினமையால் தன்னை மட்டுமன்றித் தன்னால் படைக்கப்பட்ட ஆன்மாக்களையும் பேணும் தாய்த்தகைமை பூண்டவரென்பது போதரும்.

இல்லறம் துறவறம் என்ற இருநெறிகளிலும் ஒழுகுவார்க்குச் சிறந்த வழித்துணையாய்நின்றவர்; தெய்வீகக்கற்பு வல்லவர்; இறைவனுடைய திருவருட்பேறுபெற்றவர்; ஆத்மஞானம்பெற்ற உயிர்களுடைய பாசத்தை நீக்கவல்ல திருவருள் பெற்றவர் என்பதெல்லாம் தெளிவுறும். இதற்கு அம்மையாருடைய பாடல்களே அகச்சான்று பகர்கின்றன.

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் - நிறந்திகழும்
மைஞான்ற கண்டத்து வானோர் பெருமானே!
எஞ்ஞான்று தீர்ப்பது இடர்?

இதனை வலியுறுத்தவே சேக்கிழார்பெருமானும்,

வண்டல் பயில்வனவெல்லாம் வளர்மதியம் புனைந்த சடை
அண்டர்பிரான் திருவார்த்தை அணைய வருவன பயின்று

என்று வலியுறுத்தினர்.

இதனையே மாணிக்கவாசகப் பெருமானும் "பாசம் பரஞ்சோதிக்கு என்பாய் இராப்பகல் நாம் பேசும்போது எப்போது இப்போதாரமளிக்கே நேசமும் வைத்தனையோ" என்றார்.

அம்மையார் தவமிக்குடையார் என்பதற்கு அவருடைய பாடல் அகச்சான்று பகர்கின்றது.

யானே தவமுடையேன் என்நெஞ்சே நன்னெஞ்சம்
யானே பிறப்பறுப்பான் எண்ணினேன் - யானையக்
கைமா வுரிபோர்த்த கண்ணுதலான் தன்கருணை
யம்மானுக் காளாயி னேன்.

இதனையே சேக்கிழார் பெருமானும் "உற்பவித்து எழுந்த ஞானத்து ஒருமையில் உமைகோன்தன்னை அற்புதத் திருவந்தாதி அப்பொழுதருளிச்செய்தார்" என்று போற்றினர். மலையின்கண் ஊற்றுத் தோன்றுவதுபோல அம்மையாரிடத்தி லிருந்து சிவஞானம் உற்பவித்தெழுந்ததென்றார். ஞானம் இருவகைப்படும். ஒன்று தன்னுள்ளடங்கியது. மற்றொன்று தன்னை விழுங்கியது. இவர் அம்மையாரிடத்து ஞானம் அடங்கியதாகவே குறிப்பிடுகிறார். எனவே செம்மையேயாய சிவஞானத்தைச் சுரக்கும் தாய் என்பது விளங்கும். அத்தகைய மெய்ஞ்ஞானம் தொடர்புடைமையால்தான் அம்மையார் தம்முடைய பாடலிலும்,

வானத்தான் என்பாரும் என்க மற்று உம்பர்கோன்
தானத்தான் என்பாரும் தானென்க - ஞானத்தால்
முன்நஞ்சத் தாலிருண்ட மொய்யொளிசேர் கண்டத்தான்
என்நெஞ்சத்தான் என்பன் யான்.

இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படருநெறி பணியா ரேனும் - சுடருருவில்
என்பருக் கோலத்து எரியாடும் எம்மானர்க்
கன்பறாது என் நெஞ்சு அவர்க்கு.

என்று அகச்சான்றுகாட்டிப்போந்தார். ஆகையால்தான் சேக்கிழார்பெருமானும்,

> இறவாத இன்ப அன்புவேண்டிப் பின் வேண்டுகின்றார்
> பிறவாமைவேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
> மறவாமைவேண்டும் இன்னும்வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
> அறவா நீயாடும்போது உன்னடியின் கீழ் இருக்க என்றார்.

என்றார். ஏனெனில் பரஞ்சோதி முனிவர் அறிவுறுத்தினாற் போல நமது இறைவன் வானத்தில், மண்ணில், பெண்ணில், மைந்தரில், பொருளினில் ஆசைதானற்றுத் தலைமையும்நீத்த தத்துவமுணர்ந்த யோகர் ஞானக்கண்கொண்டே நாடரும் சோதிமயமானவன். இத்தகைய சோதியை அம்மையார் திருவாலங்காட்டில் நேரில் தரிசிக்கும் பேறுபெற்றார். வாழ்க அவர் பொன்னடி.

“செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பார் நல் விருந்து வானத்தவர்க்கு” என்ற வள்ளுவர் குறள்போன்று இல்லறம் நடத்தியும், “யாதனின் யாதனின் நீங்கியான்நோதல் அதனின் அதனின் இலன்” என்ற குறள் போற்றித் துறவி யலிலும் வாழ்ந்து காட்டிய அம்மையார் வாழ்க்கையானது ‘அறிவறிந்த என்பதற்குப் பெண் ஒழித்து நின்றது’ என்று உரை எழுதிச்சென்ற பரிமேலழகர்போன்ற உரையாசிரியர் தலைவணங்குமாறு செய்கின்றது. அறிவு ஆண் பெண் இருபாலாருக்கும் பொது என்பதும், ஆன்மா ஆண் பெண் வேறுபாடற்று ஒன்றும் தன்மையுடையது என்பதும், வினைவசத்தால் பருவுடல்தான் வேறுபாடுடையது என்பதும் உலகறியக் காணுமாறுசெய்த தெய்வப்புலமை நல்லாளின் திருவடியை வணங்கித் திலகவதியார் வரலாறு தொடங்கு வோம்.

திலகவதியார்.

‘வேளாளன் என்பான் தாளாளன்’ என்ற சான்றோர் வாக்கில்கண்ட பெருங்குணச் செல்வியார் நமது திலகவதியார்.

பெண்ணுலகத்திற்கே திலகம் போன்றவர். தெய்வீகக்கற்பு நிறைந்தவர். 'கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை' என்ற முதுமொழிக்கிணங்க,

எந்தையும் எம்மனையும் அவர்கெனைக் கொடுக்க இசைந்தார்கள்
அந்தமுறையில் அவர்க்கே உரியது நான் ஆதலினால்

என்று போற்றிச் சென்றார்.

புகழனாரும் மாதினியாரும் செய்தவப்பயனால் தீதகன்று உலகமுய்ய மருள்நீக்கியார் திருவவதாரம் செய்தார் எனினும் திலகவதியார் அருள்நோக்கால் அவரை அப்பர் சுவாமிக ளாக்கி நம்மை மகிழச்செய்தாரன்றோ? சிறந்த சைவகேசரியை உலகுக்குக்கொடுத்து, திருநீற்றின் மகிமையை உலகுக்கு அறிவுறுத்தியும் சூலையைக்கொடுத்து நாவுக்கரசரை ஆட் கொள்ளுமாறும் செய்த அம்மையார் பெற்றி ஒரு தாய்த் தகைமையன்றோ ?

தனது தம்பியார் புறச்சமய நெறிநின்றொழுகியகாலை "சைவமாம் சமயம்சாரும் ஊழ்பெறலரிது" என்றும் "சைவ மெய்ப் பொருளின்சார்பே பொருளெனச் சார்ந்தும்" கற்றதனா லாய பயன் இறைவன் நற்றாள் தொழுதலே என்றும் இறைவ னிடம் அறிந்து முறையிட்டார்.

திருவாளன் திருநீறு திலகவதியார் அளிப்பப்
பெருவாழ்வு வந்ததெனப் பெருந்தகையார் பணிந்தேற்று

என்று போற்றியதனால் தெரியலாம்.

முழுநீறுபூசிய முனிவர்க்கும் அடியேன்

என்ற சுந்தரர் வாக்கும் நினைக்கற்பாலது. திருநீறு பூசிப் பெருவாழ்வுபெற்று நம்மையும் பெருவாழ்வு பெறும்படி அப்பரை ஆட்கொண்ட அம்மையார் நாமம் வாழ நாமும் வாழ்வோமாக.

நல்ல திலகவதியார் மொழியை நம்பி வெந்நோய்
சொல்லரசர் தீர்த்துய்ந்தார் சேமேசா

என்றார் மாதவச் சிவஞானசுவாமிகளும்.

தம்பியார் உளராக வேண்டுமென வைத்த தயா
உம்பருல கணையவுறு நிலைவிலக்க வுயிர்தாங்கி

என்றார் சேக்கிழார்பெருமான்.

தம்பியாரை உளராகவைத்தபெருமை திலகவதியாருக்கே உரியதாகும். அன்னார் புகழ் பாடிப் போற்றி இயற்பகை மனைவியார் வரலாறு போற்றுவாம்.

இயற்பகையார் மனைவி.

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு

என்ற வள்ளுவர் குறள்படி நன்மையான மனைவியார் ஆவர். இயற்பகை எனவே அவர் உலகவியலுக்குப் பகையானவர் என்பது தெளிவாகும். உலகியல் வாழ்க்கைக்குப் பகையான வரலாறு என்ற தலைப்பைக்கண்டும் அஃதுணராது பகுத்தறிவு பேசி வீண்காலம்போக்கிக் காலத்தையும் பொருளையும் பாழுக் கிரைக்கும்பாமரர் ஆராய்ச்சிசெய்வது வியப்பன்று. இறைவன் மனைவியை வேண்டிவந்தகாலத்து இயற்பகையாரும்

இதுவெனக்கு முன்புள்ளதே வேண்டி
எம்பிரான் செய்த பேறெனக் கென்னுக்
கதுமெனச் சென்றுதம்மனை வாழ்க்கைக்
கற்பின் மேம்படு காதலியாரை
விதிமணக்குல மடந்தையின் றுணையிம்மெய்த்
தவர்க்குநான் கொடுத்தன னென்ன
மதுமலர்க்குழல் மனைவியார் கலங்கி
மனந்தெளிந்தபின் மற்றிது மொழிந்தார்.

இவ்விடத்து இயற்பகையார் வரலாறு புலனாகும்.

சட்டப்படி புதுமணம் புணர்ந்த மடந்தை என்றமையால் அம்மையார் கற்பு மணம் புணர்ந்தவர் என்பதும், இளமைமிக்குடையவர் என்பதும், கற்புநெறியில்வழுவாதவர்

என்பதும், தன்னால் காதலிக்கப்படுபவர் என்பதும் தெளிவாகும். இதனால் இவர் சாதாரண பெண்ணல்லள் என்பது தெளிவாகும். உலகியல்பற்றி முன் கலங்கிப் பின் தெளிந்தார் என்றுதான் பாடல் உணர்த்துகிறது.

இன்றுநீர் எனக்கருள் செய்ததிதுவே
லென்னுயிர்க் கொருநாத நீருரைத்த
தொன்றைநான் செயுமத்தனை யல்லால்
உரிமை வேறுளதோ எனக்கென்று
தன்றனிப் பெருங்கணவரை வணங்கத்தாழ்ந்து
தொண்டனார் தாமெதிர் வணங்கச்
சென்றுமாதவன் சேவடிபணிந்து திகைத்து
நின்றனள் திருவினும் பெரியாள்.

கணவன் மனைவிக்கு அருள் செய்தது என்பதனால் ஆண்மை பற்றி அடக்கி ஆளவில்லை யென்பதுவும் "என்னுயிர்க் கொரு நாதன்" என்றதனால் ஒப்பற்ற எல்லா உயிர்களுக்கும் ஒரு நாயகனாக விளங்கும் பெருங்கருணைத் தடங்கடலை அம்மையார் உணர்ந்தார் என்பதுவும் விளங்குகிறது. அப்படிச்சென்ற அவர் "சென்று மாதவன் சேவடிபணிந்தார்" என்று கூறியதனால் நமது அம்மையார் சென்று அம்மையப்பரை வணங்கினாரேயொழியப் புல்லர்கள் கூறுமாப்போல அபசாரம் செய்யவில்லை. அப்படிப் பணிந்ததனால்தான் திருவினும் பெரியவரானார். எனவே இங்கு சிவன் இயற்பகை மனைவியாரை வேட்டுப்புணர்ந்தார் என்பது பொய்யுரையாகும். இயற்பகையார் மனைவியாரை விட்டுக்கொடுத்தார் என்பதும் அறியாமையாகும். அம்மையார் நெறிதவறினார் என்பது பேதமையாகும். கடையவனேனைக் கருணையினால் கலந்து ஆட்கொள்ளும்பேறு பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்குத்தான் கைவரப்பெறும். இதில் இறைவன் வலிந்து ஆட்கொண்ட தாய்க்கருணைபோற்றற்பாலது.

அன்னார் திருவடி என் சிந்தைவைத்து இறைஞ்சி, சிவவேதியன் மகள் வரலாறு தொடங்குவாம்.

191

சிவவேதியன் மகள்

பெற்ருற் பெறிற் பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.

என்றபடி, சுந்தரரை மணந்து பெருவாழ்வுபெற எண்ணிய வாற்ருல் சிவலோகமும் எளிதாம் வகை பெற்ருர்.

அயலோர்தவ முயல்வார்பிற ரன்றேமண மழியுஞ்
செயலானிகழ் புத்தூர்வரு சிவவேதியன் மகளும்
உயர்நாவலர் தனிநாதனை யொழியாதுணர் வழியிற்
பெயராதுயர் சிவலோகமும் எளிதாம்வகை பெற்ருள்.

உயிர்சார்ந்ததன்வண்ணமாம் தன்மையுடையது என்ற சித்தாந்தக் கருத்துக்கிணங்க, அறிவித்தாலறியும்உயிர். ஞானமானது அறிவிக்காமலே அறியும். அறிவித்தாலும் அறியாப் பாசநீக்கிப் பதியைப்பெறுவர் பெரியர் யென்றமையால் அம்மையார் பெரிதான சிவலோகத்தை எளிதாகப்பெற்ருர் என்பது புலனும். 'அறிவுடையார் எல்லாமுடையார்' என்ற வள்ளுவர் வாக்கும் நினையற்பாலது. நினைத்தலுஞ் செய்தலோடொக்கும் என்றபடி இடைவிடாது சிந்தித்த காரணத்தால் சிவலோகமும் எளிதாகப்பெற்ருர் என்பது போதரும்.

வழுக்கி வீழினும் நின் திருப்பெயரல்லால்
மற்றுநான் அறியேன். மறுமாற்றம்

என்றபடி சிந்தனையை இறைவன் தனக்காக்கியே வாழ்ந்து வாழ்நாள் முழுவதும் பாழுக்கிரைக்காது பரம்பரனைப் பணிந்து ஏத்தும் பேறுபெற்றவர் என்பதும் தெளிவாகும்.

நாயன்மார்கள் அத்தனைபேரையும் பெற்றெடுத்தோரும் சேயிழையாரே; வாழ்க்கைத் துணைவியாராக இருந்து குறிக்கோள் நிறைவேறப் பாடுபட்டவரும் சேயிழையாரே. இவர்தம் வாழ்க்கை பெண்ணுலகத்திற்கு உறு துணையாகும்

பொய்யில் காட்சியோர் பொருளுரை

புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்
தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

(தொடர்ச்சி)

கடவுளைக்கண்ட இடத்தை நம் சைவசமயாசாரியர் பலரும் திருவாய்மலர்ந்தருளியவாற்றால், ஒருவாறு சென்ற திங்களில்வந்த 'ஞானசம்பந்தம்' அறிவித்திருக்கலாம். அதன் தொடர்பாக இதிலும் சில சான்றுகள் காட்டப்பட்டுள. அறிஞர் அறிந்து கடவுளைக்காணமுயலும் நெறியில் முயன்று காண்க.

கடவுளைக் காணவிரும்புவோர் புறத்திலே தேடிக்கொண்டிருப்பாராயின் ஒருகாலும் காணவேமாட்டார். கண்ணிமையைத் திறந்து காண்பதுமட்டும் போதுவதன்று; உணர்வு என்னும் இமையைத் திறந்து காண்டல் வேண்டும்.

"ஊன்கண் நோக்கி உணர்வு எனும் இமை திறந்துவிழித்திலேன்"

என்றருளினார் திருநாவுக்கரசு நாயனார். அவ்வாறு காண்பதிலும், உயிர் ஒன்று இருப்பதாகவும் அது கடவுளைக் காண்பதாகவும் இல்லை. உயிர் ஒழியாதொழிதல்வேண்டும். "ஊனினுள் உயிரைவாட்டி உணர்வினார்க்கு எளியர்" என்பதும் அவர் அருளியதே: "உள்ளுமாய்ப் புறமுமாகி........ கள்ளமாய்க் கள்ளத்துள்ள" கடவுளைப் புறத்திலேமட்டும் தேடுவது இளைப்பைத்தான் விளைக்கும். "நிணமுடை நெஞ்சின் உள்ளால் நினைக்குமா(று) நினைக்கின்றார்க்கு உணர்வினோடு இருப்பர்", "ஆன்மாவின் இடமதாகி உசிர்ப்பு எனும் உணர்வும் உள்ளார்", "நெஞ்சுளே புகுந்துநின்று நினைதரு நிகழ்வினான்", "சித்தத்தை ஒன்றவைத்தார் சிவமதே நினையவைத்தார்", "சிந்தையுந் தெளிவும் ஆகித் தெளிவினுட் சிவமும் ஆகி வந்தனன் பயனும் ஆகி", "அறிவும் ஆகி அறிவினுட் செறிவும் ஆகி" என்றருளிய அப்பர்சுவாமிகள் "தெரிபுரி சிந்தையார்க்குத் தெளிவு அலால் அருளும் இல்லை"

என்று ஈரெதிர்மறையால் உறுதிப்படுத்திய உண்மையைச் சைவர் எல்லோரும் உணர்ந்து, உணர்ந்தவாறே ஒழுகிப் பேரின்பவாழ்வு நடாத்தல் வேண்டும். "தொண்டர் அகம் அலாற் கோயில் இல்லை" என்றதொன்றே அத்தெளிவை விளக்கும்.

"வேதகீதன்றன் பாதம் மெள்ளத்தான் அடையவேண்டில், மெய்தரு ஞானத்தீயால் கள்ளத்தைக் கழியநின்றார்", "ஞானத்தை விளக்கை ஏற்றி நாடிஉள் விரவ வல்லார் ஊனத்தை ஒழிப்பர்" என்று "உணருமாறு உணர்த்துவேன்" என்றுரைத்தே உணர்த்திய சொல்வேந்தர் நம்பாற் கொண்ட பெருங்கருணைத்திறத்தால் "ஆநந்த அருள்கள்" செய்த நன்றியைச் சைவர் மறவாது போற்றற்பாலர். நம் பொய்மை போதல்வேண்டும். அதுபோனால் அன்றி மெய்மை தோன்றாது. அது தோன்றினால்தான் அதை நினைத்தல் இயலும். இன்றேல் நினைக்க நமக்கு வன்மை இல்லை. நினைக்கும் வன்மை பொறிக்கு இயல்பாகவே இல்லை. அவை சடம். சித்தாகிய ஆன்மாவே அப்பொறிகளைக் கருவியாக் கொண்டு நினைத்தற்குரியது. அறிவில்லாத பொறியும் அப் பொறிகொண்டறியும் உரிமையுடைய ஆன்மாவும் ஆண்டவனை அறியாத்திறத்தில் ஒன்றுமேயன்றி வேறாகா. இதைத் தான், ஆளுடைய அரசர் தம்மேல்வைத்து,

"பொய்ந்நெக நினையமாட்டாப் பொறியிலா அறிவிலேனே"

என்று உணர்த்தியுள்ளார்.

இவ்வாறு பல வாக்கியங்களாலும் உணர்த்தியதொன்று தருமைக்குருஞானசம்பந்தர் திருவாக்கில் எவ்வாறுவந்துளது? நோக்குமின் நுண்புலவாணர்காள்!

"ஆறாறு தத்துவம்நீ அன்றுஎன்று அறிந்தனையே
ஆறாறும்கண்டு அறிவன் ஆயினையே—மாறாமல்
உன் அறிவில் ஆனந்தத்து ஓங்கினையே ஓராமல்
நின் அறிவை விட்டு அதுவாய் நில்."

194.

மனிதப்பிறவியும் வேண்டுவதே : : : : இந்த மாநிலத்தே

வித்துவான், திரு. T. S. தேவசேனாபதி. வேலூர்.

தெய்வமணங் கமழும் ஒரு தேவாரத்தின் ஈற்றடியாக மிளிர்வது இத்தொடர். இத் திருப்பாடல் சமய குரவரில் ஒருவராகிய நாவரசர் பெருமானால் அருளப்பெற்றது. அப் பெருமான் பல தலங்களைத் தரிசித்துக்கொண்டு தில்லையம் பதியை அடைந்தார்கள். அம்பலத்தே நட்டம் பயிலும் நடராசப் பெருமானைக் கண்குளிரக் கண்டார்கள். அப் பெருமானும் "என்று வந்தாய்? என்று கேட்பதுபோன்று காட்சியளித்தார். அக்காட்சியைக்கண்ட நம் சைவப்பெருந் தகையார் உள்ளம் நெகிழ்ந்து நெகிழ்ந்து உருகினார்கள். அப் பெருமான் திருக்கோலத்தைச் செந்தமிழ்ச் சொல்லோவியத் தால் அழகுறத் தீட்டினார்கள்.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்தசடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப்பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

ஏனைய அடியார்களும் ஆழ்வார்களும் பிறவி வேண்டாம் வேண்டாம் என்று ஓலமிட்டு உருகாநிற்கின்றனர். ஏன்? பிறவித்துன்பம் மிகக் கொடிது ஆதலின் "ஆதலால் இப்பிறவி வேண்டேன் அரங்கமா நகருளானே" என ஆழ்வார் ஒருவர் அருளியதனையும் நோக்குக. ஆனால் நம் அப்பர் பெருமானோ பிறவி வேண்டும் என்றே கூறுகின்றார். ஆதலின் இத் திருப்பாடலில் மிக அருமையான கருத்துக்கள் அமைந்து இருத்தல் வேண்டும் என்பது புலனாகின்றது. இனி இப் பாடலில் நம் மனக்கண்முன்நிற்பன நான்கு சொற்றொடர்கள்.

1. மனித்தப்பிறவி
2. மாநிலம்
3. காணப்பெற்றால்
4. நடராசப் பெருமான் திருவுருவம்

மனித்தப்பிறவி:- இந்த நிலவுலகில் காணப்பெறும் பொருள்களோ பல. உயிர் உள்ளனவும் உயிர் இல்லனவுமாகக் காணப்படுகின்றன. இவை பலபிறவிகள் எடுக்கின்றன. அப்பிறவிகள்தோறும் அவைபடும் இன்னல்களுக்கோர் எல்லையுண்டோ? "எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன்" என மணிவாசகப்பெருமானும் அருளினார்கள். ஏனைய பிறவிகட்கு நேரும் துன்பங்களை போக்கிக்கொள்ளும் திறம் இல்லை. ஆனால் மக்கட்பிறவியில் துன்பத்தை நீக்கி இன்பம் எய்த வழியுண்டு.

இவ்வுலகில் உள்ள பொருள்களை நம் பெரியோர் இருவகையாகப் பிரித்தனர் - உயர்திணை என்றும் அஃறிணை என்றும். உயர்திணை என்றால் உயர்ந்தபகுதி. அஃறிணை என்றால் உயர்வு அல்லாதபகுதி. நன்னூல் என்னும் இலக்கணநூலில்,

> மக்கள் தேவர் நரகர் உயர்திணை
> மற்றுயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை

என்று அவ்வாசிரியர் கூறுகிறார். மக்கள் தேவர் நரகர் என்ற முத்திறத்தாரும் உயர்திணைப் பகுதியைச் சேர்ந்தவராவர்; பிற உயிர் உள்ள பொருள்களும் உயிர் இல்லாத பொருள்களும் அஃறிணைப்பகுதியைச் சேர்ந்தனவாகும்

மக்களைவிட தேவர் உயர்ந்தவராக இருந்தும் தேவரை முதலில் கூறாது, மக்களை இச்சூத்திரத்தின் முதலில் கூறியதன் நோக்கத்தைச் சிந்தித்துப் பார்மின்கள். தேவர் என்பார் நல்வினை மிகுதியாகச் செய்து தேவர் உலகு அடைந்து ஆண்டு இன்பமே நுகர்ந்துகொண்டிருப்பவர். துன்பம் என்பதே அவர்களுக்குத் தெரியாது. அப்புண்ணிய முடிவின்கண் தனுகரண புவன போகங்களை மீண்டும் எய்துவர். நரகர் என்பார் தீவினை மிகுதியாக இயற்றி நரகலோகஞ் சென்று ஆண்டுத் துன்பமே அனுபவித்துக்கொண்டிருப்பர். தேவர்களுக்கு இன்பம் ஒன்றே தெரியும் - துன்பம் தெரியாது. நரகர்களுக்குத் துன்பம் ஒன்றே தெரியும் - இன்பம் தெரியாது.

ஆனால் மக்களுக்கோ இன்பம் துன்பம் இரண்டும் தெரியும்; அவ்விரண்டையும் கலந்தே அனுபவிக்கின்றனர். மக்கள் துன்பம் அடையும்போது அதனை நீக்கி இன்பம் எய்த விழைகின்றனர். இன்பமும் எய்துகின்றனர். அவ்வின்பமும் சிறிது சிறிதாகக் குறையத் தொடங்குகின்றது. அழிந்தும் விடுகின்றது. என்னே இது! நாம் அனுபவித்த இன்பம் எங்கே? மாடிவீடு எங்கே? பஞ்சணைப் படுக்கை எங்கே? வாகனங்கள் எங்கே? செல்வத்துடன் இருக்கும்போது மனைவி மக்கள் எல்லாம் இன்பம்மிக்க அன்புடையவராக அன்றோ காணப்பட்டனர். செல்வம் சென்றதுபோன்றே அவர்கள் அன்பும் சென்றுவிட்டதே என்று எண்ணி இவ்வுலகில் நாம் அனுபவிக்கும் இன்பம் எல்லாம் அழியும் தன்மையன என்ற முடிவை அடைகின்றோம். முற்றும் துறந்த பட்டினத்தடிகள் காதற்ற ஊசியும் வாராதுகாணும் கடைவழிக்கே என்ற மருதவாணர் வாக்கை நோக்கினார். தம் செல்வம் அனைத்தும் பலரும் எடுத்துச் செல்லுமாறு விடுத்துத் துறவறம் மேற்கொண்டார். இவ்வாறு துறந்தமைக்குக்காரணம் என் என வினவினார்க்கு,

"மாடுண்டு கன்றுண்டு மக்களுண்டு என்று மகிழ்ந்ததெல்லாம்
கேடுண்டு எனும்படி கேட்டுவிட்டோம்."

என்று அடிகள் விடையளித்தார்கள். எனவே இவ்வுலகில் மனிதன் எய்தும் இன்பம் எல்லாம் அழியக்கூடியன என்பது விளங்குகிறது. இதனை மனிதனால்தான் உணரமுடியும். பின்னர் அழியா இன்பத்தை யாண்டு அடையலாம் என மனிதன் ஆராயத்தொடங்குகின்றான். ஆராய்ந்தபின்னர் இறைவனிடம் மட்டுமே அழியா இன்பத்தை அடையலாம் என ஓர்ந்து முயலுவன். தேவர்களுக்குத் துன்பம் என்பதே தெரியாது. ஆதலின் அவர்களுக்கு ஆராய்ச்சி நிகழ்வதில்லை. நரகருக்கு இன்பமே தெரியாது. ஆதலின் இவர்களுக்கும் ஆராய்ச்சி இல்லை. இன்பதுன்பங்களைக் கலந்து அனுபவிக்கும் மக்களுக்கே இவ்வாராய்ச்சி தோன்றுகின்றது. ஆதலின் தேவர் நரகர் இவ்விருவரைக்காட்டிலும் மக்களே சிறந்தவர் ஆவர். இக்கருத்துப்பற்றியே நன்னூல் ஆசிரியர் தேவர்களை

முதலில் கூறுது மக்களையே முதலில் கூறினுர். எனவே ஏனைய பிறவிகளைக்காட்டிலும் மனிதப்பிறவியே சாலச் சிறந்ததெனை விளங்குகிறது.

இவ்வுலகில் தான் அனுபவிக்கும் இன்பங்கள் எல்லாம் அழியக்கூடியன என்பதனை உணர்ந்த மனிதன் அழியா இன்பம் எய்தமுயலுவன் என்று முன்கூறினேன். அவ் வின்பத்தை இறைவனிடம்தான் அடையமுடியும் என்பதனை ஆராய்ந்தறிந்தான். எனவே கடவுள் உண்மையைப்பற்றி ஆராயத்தொடங்கினுன். கடவுள் உண்மையைக்காட்ட நம் சமயங்கள் பல சான்றுகள் தருகின்றன. நம் நாவரசர் பெருமான் இத்திருப்பாடலில் இரண்டு சொற்களை நமக்கு ஓதி இருக்கின்றுர்கள். அவ்விரண்டு சொற்களை ஆராய்ந்தாலே போதும். மனித்துப்பிறவி - மாநிலம் என்பன அச்சொற்கள். கடவுள் உண்டு என்பதற்குப் போதுமான சான்றுகள் இவ்விரு சொற்களே. மனிதன் தன்னைப்பற்றி ஆராய்ந்தால் கடவுள் உண்டு என்பதனை ஒருநாளும் மறக்கமாட்டான். முதலில் மனிதன் தன்னைப்பற்றி எவ்வாறு ஆராய்ந்தான் என்பதனை நோக்குவோம்.

ஒரு மனிதன் ஒருநாள் ஆற்றங்கரைக்குச் சென்றுன் உலர்விவர. அங்கே ஒருவர் படுத்திருக்க நான்குபேர் தூக்கிச் செல்வதனையும், அவர்களுக்குப்பின்னுல் பலர் செல்வதனை யும், சிலர் கண்ணீர்விடுவதனையும், சிலர் முகவாட்டமுற்றிருப் பதனையும் கண்ணுற்றுன். அருகில்நின்ற ஒருவரை நோக்கி "இவர் ஏன் இவ்வாறு படுத்திருக்கிறுர்? இவரை ஏன் தூக்கிச்செல்கின்றனர்" என்று கேட்டான். அருகில் நின்றவர் "பிணம்" என்றுர். 'பிணம் என்றுல் எனக்குப்புரியவில்லையே' என்றுன் இந்த மனிதன். 'புரியவில்லையா? நான்சொல்கிறபடி செய்தால் புரிந்துவிடும்" என்றுர் அருகில் நின்றவர். 'சொல்லுங்கள் அவ்வாறே செய்கின்றேன்' என்றுன் அந்த அப்பாவி மனிதன். அருகில் நின்றவன் ஒரு குறும்புக்கார மனிதன். "தம்பி இங்குவா பாடையில் படுத்து இருக்கிறுரே அவரிடம் போய் பிணமே பிணமே என்று மூன்றுமுறை

கூப்பிடு" என்றான் அந்தக் குறும்புக்காரமனிதன். இந்த அப்பாவி மனிதனும் அருகில் சென்று 'பிணமே பிணமே பிணமே' என்று அழைத்தான். பதில்இல்லை. திரும்பவந்தான். 'என்ன தம்பி' என்றான் குறும்புக்காரமனிதன். பேசாமல் இருக்கிறார் என்றான் அந்த அப்பாவி. அப்படியானால் அதோ உயரமாகத் தடித்து இருக்கிறாரே அவரிடம் சென்று பிணமே பிணமே என்று மூன்றுமுறை கூப்பிடு என்றான் அந்தக் குறும்புக்காரன். இந்த அப்பாவியும் இதனை உண்மையென நம்பி அந்தத்தடித்த மனிதனிடம்சென்று 'பிணமே பிணமே' என்று அவனை அழைத்தான். அந்தத்தடித்த மனிதனுக்குக் கோபம் பொங்கி எழுந்தது. ஓங்கி ஓர் அறை கன்னத்தில் அறைந்தான். பற்களும் இரண்டொன்று கீழே விழுந்து விட்டன. நோய் பொறுக்க முடியாமல் திரும்பிவந்தான். அந்த அப்பாவி வருவதைக்கண்ட குறும்பன் 'என்ன தம்பி' என்றான். 'பல்லை உதிர்த்துவிட்டார் அந்தத்தடித்த மனிதன்' என்றான் அப்பாவி. தம்பி இப்பொழுது தெரிந்துகொண்டாயா பிணம் என்றால் என்ன என்று, படுத்துச் செல்பவரைப் பிணம் என்று அழைத்தாய் அவர் பேசவில்லை. தடித்த மனிதனைப் பிணம் என்று கூப்பிட்டாய் அவர்உன்பல்லை உதிர்த்து விட்டார். காரணம் என்ன? தடித்த மனிதனுடைய உடலில் ஒருபொருள் இருக்கிறது. படுத்துச்செல்லும் மனிதனுடைய உடலில் அப்பொருள் இல்லை. அப்பொருள் உள்ளே இருந்ததனால்தான் தடித்தமனிதன் உன்னைத் தாடையில் அறைந்தான். அப்பொருள் உள்ளே இல்லாமையினால்தான் படுத்துச் செல்லும் மனிதன் பேசாமல் இருந்தான். அப்பொருளுக்குத் தான் உயிர் என்று பெயர். அப்பொருளாகிய உயிர் உடலில் இருக்கும் வரையிலும்தான் மனிதன் பேசுவதும், ஆடுவதும், பாடுவதும். மனக்கோட்டைகள் பல கட்டுவதும். அப்பொருள் உடலைவிட்டுப் போய்விடுமானால் துண்டு துண்டாக வெட்டினாலும், எரியில் இட்டுக்கொளுத்தினாலும் உடல் உணராது. எனவே உடல் இடமாக உயிர் என்ற பொருள் உண்டு என்பதனை மனிதன் அறிகின்றான்.

பட்டினத்தடிகள்.

பண்டித வித்துவான், த. வடிவேலு, யாழ்ப்பாணம்.

இல்லறம் என்னும் நல்லற வாழ்வு வாய்க்கப்பெற்றும் வாழ்வின் உயிர்நிலையை அறியா மக்களாய் இவ்வுலக இன்பமே தாம்கண்ட முடிவாகக்கருதி இனிவரும் பிறவியை விழைந்து செல்வோர் பலராகவும், இல்லறவாழ்வு இனிதமையும் நிலையில் - இல்லற வாழ்வைப் புனிதவாழ்வாக்கி நல்வழியடைவிக்கும் நல்லாளாம் இல்லாளைப் பெறுதல் கூடாமையால் இல்வாழ் வினைத் துறந்து தனித்து வாழும் துறவுவாழ்வினை மேற்கொள் வோர் சிலராகவும் இவ்வுலகியல் விளங்கக் காண்போரெவர்க்கும் இல்லறத்திற்கினிய இல்லாளும் பெரும்பொருளும் வாய்க்கப் பெற்றிருந்தும் இறைவனருளால் இவ்வுலக நிலையாமை உணர்ந்த உடனேயே இல்வாழ்வு நீங்கித் துறவு மேற்கொண்ட பட்டினத் தடிகள் வரலாறு பெருவியப்பளித்தல் இயல்பேயாகும்.

நீதிவழியாண்ட மன்னர்கள் பலராலும், கற்புடைப் பத்தினியாம் கண்ணகியைப் பெற்ற பெரும் பெருமையினாலும் பொலிவுபெற்று விளங்கிய காவிரிப்பூம்பட்டினம் கடல் கோளால் சிதைவுற்றதெனினும் பட்டினத்தடிகள் வாழ்ந்தா ரென்ற பெரும் பேற்றினால் என்றும் பெருமதிப்புடன் விளங் கும் மாண்புபெறுவதாயிற்று.

பிறப்பு:— சிவநேசரும் ஞானகலாம்பிகையும் செய்த புண்ணி யப் பேற்றால் பட்டினத்தடிகளைத் திருமகனாகப் பெறும் பேறு பெறுகின்றனர். நம் அருமைப் புதல்வனுக்குத் திருவெண்காட ரெனப் பெயரிட்டுப் பெருங்களிப்பெய்திய சிவநேசர் அடிகளின் ஐந்தாண்டுப் பருவத்திலேயே சிவபதமடைகின்றார். தந்தையை இழந்த மைந்தனைத் தாயார் கல்விகற்கும் பணியில் ஈடுபடுத்து கின்றார். கற்கவேண்டியனவெல்லாம் கற்றுத் தேறிக் கற்ற கல்விக்குத்தக இளம்பருவத்திலேயே உண்மை, அன்பு, அடக் கம் ஆகிய அருங்குணங்கள் பூண்ட அடிகட்கு முன்னைத் தொடர்பினால் கல்வியறிவு வாய்க்கப்பெற்றதுடன் அமையாது சிவவழிபாட்டிலும் கருத்துச் செல்வதாயிற்று. சிவவழிபாடு போதிக்கவல்ல குருநாட்டம் மிகவே, ஒருநாள் உணவின்றியே நல்லாசிரியனை அடையும் விருப்பத்துடன் துயின்ற அடிகட்கு

இறைவன் கனவிற்றோன்றி 'நாளை திருவெண்காடடைந்து இறைவனை வணங்கிக் கோயிலின் முன் இருப்பின் அங்கே ஒரு பெரியார் சிவலிங்கமொன்று தருவார்; அதனைப் பெற்று வழி படுவாயாக' எனக்கூறி மறைகின்றார்.

சிவலிங்கம் பெறல்:— அந்நிகழ்ச்சியை அடிகள் கூறக் கேட்ட அன்னை சிவபூசையின் செயலருமையை மைந்தனுக்கு உணர்த்துகிறாள். அடிகள் சிவபூசைக்குக் குலம் பொருள் பருவம் ஆகியன தடையாகா; விலங்குகளுமே சிவவழிபாட்டி னல் சிறப்புற்றன; சிவவழிபாட்டிற்கு அன்பே உயிராகும் என உரைப்பவும் 'நீ ஓராண்டாதல் ஐந்தெழுத்துப்' பயில வேண்டும் அதன்பின்பே சிவபூசனை செய்யத் தகுதியுடையை யாவாய் எனக்கூறித் தாய் தடுக்கின்றாள். காலவரையறையுங் கட்டுப்பாடுகளும் பொதுமக்களுக்கேயன்றி நிலையாமை உணர்ச்சி மிக்க எம்போன்றார்க் கின்மையின் இறைவன் கட்டளைப்படி நடப்பேன் எனக்கூறி மறுநாட்காலை திருவெண்காடடைந்து இறைவனை வணங்கிநின்ற அடிகள்பால் கனவிற்றோன்றிய வாறே வியாக்கிரபுரத்துச் சைவவேதியர் இறைவன் கட்டளைப் படியே அடிகள் முற்பிறப்பில் வழிபட்ட சிவலிங்கமடங்கிய செப்புடன் நீற்றுப் பையினைக் கொடுத்துச் செல்கின்றார். அடிகள் ஆவணித்திங்களாம் அன்றையதினமே அமுதப் பாடல்கள் மூலம் சிவலிங்க வழிபாட்டினைத் தொடங்குகிறார்.

நிதிபெறல்:— அடியவர்க்குக் குறைவறக் கொடுப்பதற்குப் பொருள் போதாமையால் கவலையுடன் துயின்ற அடிகட்கு இறைவன் தவவடிவுடன் தோன்றி 'உன் மனையகத்தே வேண்டிய செல்வம் வைத்தோம்' என அருளுகிறார். மறுநாட் காலை காவிரிப்பூம்பட்டினமடைந்த அடிகள் மனையினுள்ளே இறைவனருளால் வந்தடைந்த நிதிக்குவையைக் காண்கின்றார். அதனில் ஒரு பாகத்தைத் திருவெண்காட்டிற்கு எடுத்துச்சென்று அடியவர்க்கு வேண்டியபடி கொடுத்துக் காவிரிப்பூம்பட்டினம் அடைகின்றார்.

திருமணம்:— மணப்பருவமெய்திய அடிகள் அன்னையின் விருப்பப்படி அவ்வூரிலே சிவசிதம்பரஞ் செட்டியாருக்கும் சிவகாமியம்மையார்க்கும் அருமை மகளாகப் பிறந்த சிவகலை யம்மையை மணம் புரிகின்றார். இன்ப நல்வாழ் வெய்திய

அடிகள் மகப்பேறின்மையால் தினமும் திருவிடைமருதூர்ப் பெருமானை வேண்டுகிறார்.

இறைவனை மைந்தனாகப் பெறல்:— முப்பத்தைந்தாண்டு வரை வழிபாடியற்றிய அடிகளின் குழந்தைமேல் வைத்த காதலை நீக்கி, அக்குழந்தை காரணமாகவே உலகப்பற்றொழித்து, உண்மைநிலையுணர்த்தி, உய்வடையும் வழிகாட்ட எண்ணிய இறைவன் கூவிளமரத்தடியிலே இளங்குழவியாகக் காட்சியளிக்கின்றார். திருவிடைமருதூர்ப் பெருமானுக்குப் பூசை செய்து சிவனடியார்க்கு அமுதூட்ட அன்புடை மனைவியின் தாலியை விற்ற ஆதிசைவ வள்ளலின் வறுமை நீங்கப் பட்டினத்தடிகள்பால் தான் கொடுத்த பொருளினையே பயன்படுத்தக் கருதுகிறார். அடியவர்க்களிக்கப் பொருளற்ற ஆதிசைவர் கனவில் தோன்றிக் "கூவிளமரத்தடியில் குழந்தையாகக் காட்சியளிக்கும் என்னைக் காவிரிப்பூம்பட்டினத்துறையும் திருவெண்காடரிடத்தில் கொடுத்து அவர்பால் யான்வைத்த நிதியில் எம்மளவு பொன் பெற்று நுமது வறுமை நீங்கப் பெறுவீர்" என உரைத்து மறைகின்றார். இச்செய்தியைப் பட்டினத்தடிகளுக்கும் உரைக்கின்றார்.

மறுநாள் தான் விரும்பியவாறே இறைவன் ஆதிசைவர் மூலம் திருமகவாகப் பட்டினத்தடிகளை அடைகின்றார். தம்மையடைந்த குழவிக்கு அடிகள் மருதவாணரெனப் பெயரிடுகின்றார். மகப்பேறு கருதி வழிபட்ட அடிகள்பால் இறைவன் தானாகவே அருட்குழந்தையாகப் புகுவதை விடுத்து ஆதிசைவர் மூலம் அடிகளையடைந்தமை, பட்டினத்தடிகள் இறைவனையே திருமகவாகப் பெறும் பேறு பெற்றேன் என்பதனை ஆதிசைவரும், அவர்மூலம் உலகமுமே அறிதல் வேண்டும் என்ற இறைவனின் பெருவிருப்பேயாதல் வேண்டும்.

அடிகளின் துறவு:— உரிய பருவத்திலே கல்வி கற்கத் தொடங்கிய மருதவாணர். கற்றுத் தேறியதும் தானடைந்த குலத்திற்கேற்ப வாணிகத் துறையில் மிகுந்த அனுபவமுடையவராகின்றார். பதினாறுண்டுப் பருவமுற்ற மருதவாணர் கடல் வாணிகஞ் செய்யுங் கருத்தை அடிகளுக்குத் தெரிவித்து அவரறிவைத் தெளிவித்து வாணிகத்தின் பொருட்டு வணிகத் தோழருடன் கலமேறிச் செலவு மேற்கொள்கின்றார்

கலமேறிச் சென்ற அவர்கள் ஒரு தீவினையடைந்து அங்கு பண்டமாற்றுச் செய்கின்றனர். உடன்சென்றோர் பிறநாடு செல்ல, அறப்பணி மேற்கொண்டு அங்கேயே வாழ்ந்த மருதவாணரிடம் பிறநாட்டில் பொருள்தேடிச் சில தினங்களில் மீண்ட துணைவர்கள் எருவும் அவலுமே இருக்கக்கண்டு வியப்புற்று வினவுகின்றனர். "நீவிர் கவலைப்படவேண்டாம்; ஒருவருங் குறை கேளாவகையில் எல்லாம் நடைபெறும்" என உயர்மொழிகூறி வீடு திரும்பிய மருதவாணர், வழியிலே நடுக்கடலிலே புயலினால் வருந்திய தோழர்க்குத் தான் வைத்திருந்த எருவினைக் கொடுத்துக் குளிரினால் அடைந்த வாட்டத்தை நீக்குகிறார். மருதவாணர் சேகரித்த பொருள் எருவல்லவா என எண்ணிய தோழர்கள் தாம் தேடிய திரவியங்களனைத்தும் அலை கடலிலே அவதிநிலை நீக்கும் பெருமையிழந்தமையையும், விலையற்றதென எண்ணிய எரு விலை மதித்தற்கரிய உயிர்காக்கும் மருந்தாக உதவிய பெருமையையும் உணர்கின்றனர். இதுவும் மருதவாணரின் திருவிளையாடலே; யாம் அற்பமாக மதித்தற்கொன்றுமில்லை; எப்பொருளும் எல்லையிலா மதிப்புடையது என்பதனை நம் போன்றோரும் உணர்தல் வேண்டும் என்ற இறைவன் பெருவிருப்பே எருவாணிகம் மேற்கொண்டு, எவரும் வியப்படையுமாறு எருவுள் மணிகாட்டி, எல்லையிலாப் பெருஞ் செல்வராய் வாழ்ந்த பட்டினத்தடிகளையுமே காதற்ற ஊசியும், ஓலைத்துண்டுங்கண்டு துறவு மேற்கொள்ளும் பெருநிலையடைவித்து விடுகின்றது

வாணிக விருப்பாற்சென்ற மருதவாணரின் வரவு பார்த்திருந்த அடிகள்பால் தன்னுருக்காட்டாது காதற்ற ஊசியும், ஓலைத்துண்டும் வைத்த பெட்டியைக்காட்டி மறைகின்றார் மருதவாணர். அச்செயலால் அடிகளின் மாயையுணர்வு மறைகின்றது. உண்மை நிலையுணர்ந்து தம் உடைமைகள் அனைத்தையுந்துறந்து துறவுநிலை யடைகின்றார்.

இறைவன் தன்னையடைந்து வாணிகத்தால் மீண்டபின் மனைவிகையில் காதற்ற ஊசியும், ஓலைத்துண்டுமடங்கிய பெட்டியைக் கொடுத்துத் தன்னை உய்வடைவித்து மறைந்தார் என்பதனை அடிகள் தாம் பாடிய,

பட்டைக் கிழித்துப் பருவூசி தன்னைப் பரிந்தெடுத்து
முட்டச் சுருட்டியென் மொய்குழ லாள்கையில் முன்கொடுத்துக்
கட்டி யிருந்த கனமாயக் காரிதன் காமமெல்லாம்
விட்டுப் பிரியவென்றோ விங்ஙனே சிவன் மீண்டதுவே.

சூதுற்ற கொங்கையு மானார் கலவியுஞ் சூழ்பொருளும்
போதுற்ற பூசலுக் கென்செய லாஞ்செய்த புண்ணியத்தால்
தீதற்ற மன்னவன் சிந்தையினின்று தெளிவதற்கோ
காதற்ற வூசியைத் தந்துவிட்டா னென்றன் கைதனிலே.

என்ற பாடல்கள் மூலமே உலகினர்க்கு உரைத்துச் செல்வா ராயினர்.

துறவடைந்து சென்ற கட்டளைப்படி கணக்காயரான சேந்தனார் நிதிகளையெல்லாம் எவருமெடுக்குமாறு விடுகின்றார். சேந்தனார் செயல்கேட்ட மன்னன் அடிகள் பொருளை எவரும் எடுக்காதபடி தடுத்துச் சேந்தனாரிடமுள்ள பொருள்களுமே பட்டினத் தடிகளதென அவற்றையுங் கவர்ந்து கொண்டதுட னமையாது அவரைச் சிறையிலுமடைக்கின்றான். சேந்தன் மனைவி ஆண்மகவுடன் அயலூர் சென்று கூலிவேலை செய்து பிழைத்திருக்கின்றாள்.

பசிவந்த காலை எவரிடத்திலாவது பிச்சையேற்று உண்டு வந்த அடிகள் செயல் தமக்கு இழிவேற்படுத்துமெனக் கருதிய இனத்தவர்கள் அடிகட்கு நஞ்சுகலந்த அப்பத்தைக் கொடுக்கின் றனர். அதனைத் திருவருளாலறிந்து அப்பத்தைக் கொடுத்தவர் வீட்டில் சொருகுதலும் கண்டோர் வியப்பும் அச்சமும் அடையு மாறு வீடு தீப்பற்றி எரிகின்றது. பின் திருவெண்காடடைந்த அடிகள் தாயாரின் மரணங்கேட்டுக் காவிரிப்பூம்பட்டினஞ் சென்று ஈமக்கடன் முடிக்கின்றார். திருவிடை மருதூர்ப் பெருமான் கட்டளைப்படி தலயாத்திரை செய்கின்றார். வட நாட்டு யாத்திரையிலே மாகாளத்திலே இறைவனை வணங்கிப் பிள்ளையார் கோயிலில் நிட்டையில் இருக்கின்றார். அரசன் பொருள்களைக் கவர்ந்த திருடர் சிலர் கணபதிக்குக் காணிக்கை கொடுப்பதாகத் தாம் செய்துகொண்ட உறுதிப்படி பிள்ளையார் கழுத்திற் போடுவதாக நினைந்து நிட்டையிலிருந்த அடிகள் கழுத்தில் பதக்கத்தைப் போட்டுச் செல்கின்றனர். கள்வரைத் தேடிய அரசன் காவலர் அடிகள் கழுத்தில் கிடந்த பதக்கத்தை மன்னனுக்குக் காட்டி அடிகளைக் கழுவேற்றும் உத்தரவைப் பெறுகின்றனர்.

பத்திரகிரியாரின் துறவும் அடிகள் மகிமையும்:- அரசன் கட்டளைப்படி கழுமரத்தினிடம் சென்ற அடிகள் முன்னை வினை விளைவே இவ்விபரீத முடிவுக்குக் காரணமாகும் என எண்ணு கிறார். இறைவனை நோக்கி,

என்செயலாவதி யாதொன்று மில்லை யினித் தெய்வமே
உன்செயலலேயென் றுணரப்பெற் றேனிந்த வூனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று மில்லைப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினையோ இங்ஙனே வந்து மூண்டதுவே.

எனப் பாடுகிறார். கழுமரம் தீப்பற்றி எரிகின்றது. மன்னனும் அடிகளின் அடியடைகின்றான். அப்பொழுதுதான் அடிகளின் மகிமைகாட்டிப் பத்திரகிரியாரைப் பக்குவ நிலையடைவிக்க இறைவன் செய்த திருவிளையாடலை நினைந்து வியப்படை கின்றார் அடிகள். உலகமே அடிகளினுடைய மகிமையை உணர்கின்றது. அடிகள் கட்டளைப்படி பத்திரகிரியார் அரசு துறந்து திருவிடைமருதூரடைந்து கோயிலின் மேற்கோபுர வாயிலில் உறைகின்றார்.

அடிகளின் இறுதிநிலை:— பத்திரகிரியாரின் முத்தி நிலை கண்டு தன்னிலை குறித்து வருந்திய அடிகளை இறைவன் திரு வொற்றியூருக்கு அழைக்கின்றார். திருவிடைமருது நீங்கித் திருவெண்காடடைந்த அடிகன் சேந்தனார் நிலைகேட்டு அவரைக் கட்டிலிருந்து நீக்கித் தெளிவடைகின்றார். தில்லையில் வாழு மாறு பணிக்கின்றார். சேந்தனார் திருவிசைப்பா முதலியன பாடிச் சிவபதமடைகின்றார்.

இறைவன் பணிமேற்கொண்ட அடிகள் திருவொற்றியூர டைந்து இறைவன் மீது ஒருபா ஒருபஃதியற்றி வாழுநாளிலே ஒருநாள் ஏகாலியச் சிறுவர்க்கு விளையாட்டுக் காட்டுவதாகக் கூறித் தன்னை யொருகுழியிற்புதைக்குமாறு வேண்ட அவர்கள் அவ்வாறு செய்கின்றனர். அடிகள் அருகிலிருந்த குன்றின்மேல் வெளிப்பட்டு நிற்கின்றார். மீண்டுமவரைப் புதைத்த சிறுவர் கள் அடிகள் சிவலிங்கமாகக் காட்சியளிக்கக் காண்கின்றனர். அடிகள் சிவலிங்க வடிவு பெற்றமையே அடிகளின் தனிச் சிறப்பை விளக்குவதாயிற்று.

அடிகளின் காலம்:— அடிகள் தாம்பாடிய திருவெண்காட் டுத் திருவிசைப்பாவிலே,

பாவலனொருவன் செந்தமிழ்க் கிரங்கிப்
பரவையாருடலை மாற்ற
ஏவலாளாகி யிரவெலா முழன்ற
இறைவனே யேக நாயகனே.

எனச் சுந்தரர் வரலாறு கூறுவது கொண்டு அடிகள் சுந்தரர் காலத்தில் அன்றேல் அவருக்குபின்பு வாழ்ந்தவரென்பது உறுதியாகும். திருவிசைப்பாப் பாடிய சேந்தனுர் அடிகளின் கணக்காயரென அறியப்படுவதால் அடிகளும் 9-ம் நூற்ருண்டில் வாழ்ந்தவரெனக் கொள்ளக்கூடியதாகின்றது.

மீண்டும் பிறவாமை வேண்டுவோர்க்கே இறைவன் வழி செய்தல் கூடும்; இவ்வுலக வாழ்விலடையும் பொருள் புகழ் ஆகியனவெல்லாம் தாம் செய்து கொண்ட வினைக்கேற்பவே அமைவனவாம் என்ற உண்மையை உலகினர்க்கு விளக்கும் நோக்கமாகவே அடிகள் திருவிடைமருதூர் மும்மணிக்கோவை இரண்டாம் பாடலிலே,

.... ஒரு தனிக்கடவுள்! நின்
திருவடி பரவுதும்; யாமே நெடுநாள்
இறந்தும் பிறந்தும் இளைத்தனம் மறந்தும்
சிறைக் கருப் பாசயஞ் சேரா
மறித்தும் புகாஅ வாழ்வு பெறற் பொருட்டே.

பொருளும் குலனும் புகழுந் திறனும்
அருளும் அறிவும் அனைத்தும் - ஒருவர்
கருதா என்பார்க்குங் கறைமிடற்ருய் தொல்லை
மருதா என்பார்க்கும் வரும்.

எனக் கூறுவாராயினர்.

துறவுநிலையினை அடைந்தகாலத்தும் தமது கடமையை உணர்ந்து அன்னையின் ஈமக்கிரியையை நிறைவேற்றிச்சிவலிங்க வடிவுபெற்ற அடிகள் இன்பவாழ்விற்கு வேண்டிய பெரும் பொருளையும், உத்தம மனைவியையும் பெற்றிருந்தும் மகப்பேறென்னும் பேராசையால் மனங்கலங்கிய நிலைகண்டு தானே திருமகனுகத் தோன்றி அடிகளின் ஆசையை நீக்கி இறைநிலை காட்டி இன்பவாழ்வளித்தாரென்ற வரலாறு பண்பட்ட தமிழர் வாழ்வின் உயர்விற்கே ஒருபெரும் எடுத்துக் காட்டாவதுடன். "நன்மையுந்தீமையும் எழுதாப்படி வருதலில்லை' என அடிகள் கூறியவாறு உரியகாலத்தில் எங்கும் வினைவிளைவினை அனுபவித்தல் தப்பாது என்பதனையும் வலியுறுத்தி நிற்கின்றது. வாழ்க உண்மைநெறி. வாழ்க உத்தமர்கள்.

மதிப்புரைகள்

மாசிமக மலர் :

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து இலவச வெளியீடு. பதிப்பாசிரியர் ஷ மடத்துக்கல்லூரி பிரின்ஸ்பால் திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M.A., B.O.L. ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் ஆற்றிவரும் அறப்பணி களுக்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டு. குடந்தை மூர்த்திதலம் தீர்த்தங்களின் சிறப்பு, ஷ தலத்திருப்பதிகங்கள் குறிப்புரை யுடன் இப்பகுதிகள் நூலிற்கு முன்னரும், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் வரலாறு அவர்கள் அருளிய சகலகலாவல்லி மாலை குறிப்புரையுடன் திருவாசகத்தின் முதலிலுள்ள சிவ புராணம் குறிப்புரையுடன் இப் பகுதிகள் பின்னரும்சேர்க்கப் பட்டுள்ளன. குறிப்புரை எழுதியவர் திருச்சி வித்துவான், தி பட்டுசாமி ஓதுவார். மலர்நடுவில் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள், மொழிப்பணி சமயப்பணி பொதுநலப்பணி இவைகளாக இன்னின்ன அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார் கள் என்பதைக்காட்டக்கூடிய விபரங்கள் தரப்பட்டுள்ளன. குடந்தை, மாயூரநகர்களில் நிறுவியுள்ள அறக்கட்டளைகள், (இராஜாஜி அபிராமி அந்தாதிப் பரிசு. கந்தர்கலிவெண்பாப் போட்டிப்பரிசு, ஸ்ரீ குருஞானசம்பந்தசுவாமிகள் நினைவுத் தேவாரப் பரிசு, உ. வே. சாமிநாத ஐயர் நினைவு உபகாரச் சம்பளம்.) அங்கங்குள்ள ஹைஸ்கூல் மாணவர்களுக்குப் பயனளித்து வருவதைக்காட்டக்கூடிய பரிசுபெற்றமாணவர் களின் ஸ்டேட்மெண்டும் கொடுக்கப்பட்டுள்ளன. 28-2-53ல் நிகழ்ந்த மாசிமக விழாவின் நினைவாக வெளியிடப் பெற்ற இம்மலர் எல்லாவகையிலும் சிறப்புற்று விளங்குகிறது. அன்பர்கள் பெற்று மலர் மணத்தை நுகர்வார்களாக.

தமிழ் வரலாறு :

அண்ணாமலைப்பல்கலைக்கழக வெளியீடு இது. இராமநாத புரம் சமஸ்தானவித்துவான் ரா. இராகவையங்கார் அவர்கள் ஷ கழகத்தில் ஆராய்ச்சித்துறைத்தலைவராக விளங்கிய

பொழுது அவர்களால் 21 தலைப்புக்களில் எழுதப்பெற்ற கட்டுரைகள் அடங்கியுள்ளன. இந்நூல் ஒருபெரிய ஆராய்ச்சிக் கருவூலம். அறிஞர்களுக்குப் பெருவிருந்து. தமிழ்பயிலும் மாணவர்களை ஆராய்ச்சித்துறையில் ஈடுபடச்செய்வதற்கு இது ஒருதூண்டுகோல் என்னலாம். தொல்காப்பியம் என்றதலைப் பின் ஆராய்ச்சியில் (பக்கம் 268) 28, 30க்கு இடையில் 29-வது வியர்த்தல் என்னும் மெய்ப்பாட்டிற்குரிய வடமொழி ஒப்புமை இப்பதிப்பிலும் காணப்பட்டிலது. சில ஆண்டுகளாகச் சென்னைப்பல்கலைக்கழகத் தமிழ் வித்துவான் பரீக்ஷைக்குப் பயிலும் மாணவர்களுக்குப் பாடமாக இது அமைந்திருந்தும் நூல்கிடைக்கப்பெறவில்லை. இச்சந்தர்ப்பத்தில் இப்பொழுது இந்நூல் இரண்டாம்பதிப்பாக வெளிவந்தது மாணவர் களுக்குப் பேருபகாரமாகும்.

மதம் வேண்டுமா ?

குன்றக்குடி அருள்நெறித் திருக்கூட்ட வெளியீட்டு வரிசையில் இச்சிறு வெளியீடும் ஒன்று. எளிய உரை நடையில் ஆக்கித்தந்தவர்கள் பேராசிரியர், திரு. ஆ. முத்துசிவன் M, A.. அவர்கள். மதத்தை மறுக்கும் ஆரவாரப் பேச்சிற்கு இது ஒரு ஆழமான மறுப்பாகும். மேனுட்டறிஞர் களின் மேற்கோள்களுடன் மதநிர்த்தாரணம் செய்யப்பட்டுள் ளது, 'மதத்திற்கு ஆதாரம் மெய்ஞ்ஞானி அனுபவம். விஞ்ஞானிகள் ஆராய்ச்சிச்சாலைகளில் அமர்ந்து ஊணையும் உறக்கத்தையும் துறந்து பௌதிகரஸாயன உண்மைகளைக் கண்டு பிடிக்கிறார்களோ அவ்வாறே மெய்ஞ்ஞானிகளும் ஆன்ம ஆராய்ச்சிச் சாலைகளில் அமர்ந்து உற்றாரையும் ஊரா ரையும் இகத்தையும் சுகத்தையும் துறந்து தெய்விக உண்மை களைக்கண்டுபிடிக்கிறார்கள். அவர்கள் வெளியிடும் அனைத்தும் அநுபூதிமயம்' 'பூவுலகைப் பொன்னுலகாக்கவே மதம் பாடு படுகின்றது.' இது போன்ற இந்நூலின் எளிய உரைநடை வாசகர்களுக்கு இன்பமளித்து மத நம்பிக்கையை வற்புறுத் துகிறது. இதன் விலை அணு 2.

தமிழரசுக்கழக மாநாட்டு மலர்.

25—1—53 அன்று சென்னையில் நடைபெற்ற மாநிலத் தமிழரசுக்கழக இரண்டாவது மாநாட்டில் அறிஞர்கள் நிகழ்த்திய சொற்பொழிவுகள் இதில் அடங்கியுள்ளன. தமிழ்ப்பெரியார் திரு வி. க, ஔவை. டி. கே. சண்முகம், மாநாட்டின் தலைவர் ம. பொ. சி, பல்கலைச் செல்வர் T. P. மீனாட்சிசுந்தரனார், ந. சஞ்சீவி, ஜி. உமாபதி., ஆசிரியர் மங்கலக்கிழார், கவிஞர் வானம்பாடி, கி. வா ஜகந்நாதன். அ. ச. ஞானசம்பந்தம் போன்ற பல அறிஞர்களின் கம்பீரமான பேச்சுக்கள் படிப்போர்க்கு உணர்ச்சிவேகத்தை எழுப்புகின்றது. இம்மாநாட்டை ஒட்டி முதனாள் நடந்த தமிழ் இலக்கிய மாநாட்டில் குன்றக்குடி ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அருளிய வாழ்த்துரையும் மலரின் மணமாக அமைந்துள்ளது. தமிழ் மணம் வீசும் தமிழ் முழக்க மலரின் விலை அணா பன்னிரண்டுதான். வேண்டுவோர் தமிழ் முழக்கத்திற்கு எழுதிப் பெறுக.

தேவாரமணி.

அப்பர், சம்பந்தர், சுந்தரர், என்ற வரிசைகளில் 150 + 100 + 50 = 300 பாக்கள் இதில் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன. திருமுறைகளைப் பயிலவேண்டும் என்ற விருப்பத்தை மக்களுக்கு உண்டாக்குதலே இவ்வெளியீட்டின் நோக்கம் ஆகும். யாப்பிலக்கணக் கண்கொண்டு இதனைக்கண்டு, கலிவிருத்தம், கட்டளைக் கலித்துறை, அறுசீராதி விருத்தங்கள் முதலிய பெயர்களை அமைத்திருப்பதும், பாடல்களின் சீர் ஓசை முதலியவற்றில் சிலகுறைபாடுகள் கண்டு, அவைகள் நீங்கச் சில எழுத்துக்களைப் புதிதாக அங்கு அமைத்திருப்பதும் இந்நூலின் சிறப்பாகும். திருமுறை மணம் எங்கும் கமழவேண்டும் என்ற பெருநோக்குடன் இதன் தொகுப்பாளர்அன்பர் ராய, சொ. அவர்கள் இதற்குமுன் திருமுறைத் தொகுப்பு நூல்கள் பல உலகிற்குத் தந்துதவியுள்ளார்கள். அந்தமுறையில் இதுவும் ஒன்று, அன்பர்கள் பெற்று நல்லன காண்பார்களாக. 'ராய, சொக்கலிங்கம்அவர்கள், அமராவதி புதூர், இராமநாதபுரம் ஜில்லா' என்றவிலாசத்திற்கு 0–6–3. தபாற்றலை அனுப்பிப் பெறலாம்.

209

கோசார பலன்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. முத்துசோதிடர், திருவிடைமருதூர்.

(நந்தனஹூ பங்குனிமீ 1உமுதல் 31உவரையில்)

(14—3—53 முதல் 12—4—53 வரையில்)

1. மேஷம், அசுவதி, பரணி, கார்த்திகை ¼.

அசுவதி பூரா - பரணிமுதல் ஒன்று இரண்டு பாதங்கள் சம்பந்தப்பட்ட மேஷராசி பலன் விசேஷ லாபத்தையும் மனதுக்கு சந்தோஷத்தையும், சகல காரியசித்தியையும் உத்யோக மேன்மையையும், வியாபாரப் பெருக்கத்தையும், மேலோர் பெரியோர் உதவியையும் தரும். மற்ற இருநக்ஷத்திரமும் பரணி 3, 4. கிருத்திகை 1-ம் பாதம் பலவித சிரமத்தையும், கிரிமினல் கேசில் மாட்டிக் கொள்வதையும் அபாண்டமான அபவாதங்களையும் சத்துருக்களுடைய பீதியையும் தரும். தெய்வ வழிபாட்டாலும் மேலோர் பெரியோர் வந்தனத்தாலும் நன்மைப்படலாம். வியாழன் சுபவாரம்.

2 விருஷபம். கார்த்திகை, ¾ ரோஹிணி மிருகசீரிஷம். ½.

கார்த்திகை இரண்டாம் பாதமும், ரோஹிணி முதல் பாதமும் பாதகமானபலனைத்தரும். அதிகசெலவுகள், வைத்தியச் செலவுகள், இல்லறசிரமம், பணக்கஷ்டம் மனதுக்குச் சதா கிலேசம் இவை உண்டாகும். மிருகசீரிஷம் முதல் பாதத்துக்கு அதிகத் தொல்லையும், விவசாய நஷ்டமும் தெய்வபலக் குறைவுகள் பெரியோர் சாபமும், வீண் அலைச்சலும், கஷ்டமும் உண்டுபண்ணும் ரோஹிணி 2, 3, 4, பாதங்களும் மிருகசீரிஷம் இரண்டாம்பாதமும் சம்பந்தப்பட்ட விருஷபராசி பலன் பூர்ண ஜயத்தையும் லாபத்தையும் சந்தோஷத்தையும் தரும். புதன் வெள்ளி சுபவாரமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் ½, திருவாதிரை, புனர்பூசம் ¾.

புனர்பூச நக்ஷத்திரம் சம்பந்தப்பட்ட மிதுனராசி பலன் சந்தோஷத்தைத் தரும். சகல காரியமும் சுலப சாத்தியமாகும்.

தெய்வபலம் கிட்டும். புண்ணிய க்ஷேத்திராடனமும் சுபசோப னுதிகளும் நடைபெறும். திருவாதிரைக்குச் சிரமத்தோடு காலம் ஓடும். குடும்பத்தொல்லையும் அதிக உழைப்பும், வேலைக்குத் தக்க கூலி கிடைக்காமலும் மனக்கவலையும் உண்டாகும். மிருக சீரிஷம் பின்னரை மிதுனபலன் மிசிரமாய் நடக்கும். புதன் சுபவாரமாகும்.

4. கடகம். புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம் ஆயில்யம்.

பூசநக்ஷத்திர பலன். அசுபத்தையும் நஷ்டத்தையும் அவ மானத்தையும் விவஹாரத்தையும் அதிகச்செலவையும் களத்திர புத்திர பீடைகளையும் கலஹங்களையும் தரும். புனர்பூசம் ஆயில்யம் இரண்டும் சுபத்தையே தரும். சத்துருக்கள் ஓடி விடுவார்கள். கடன்தொல்லை தெய்வபலத்தால் எதிர்பாராதபடி நீங்கும். நல்லோர் பெரியோர் ஆசிகிட்டும். தொழில் ஓங்கும். நஷ்டதனம் கிட்டும், மனம் சாந்தியடையும். சனி வியாழன் சுபவாரமாகும்.

5. ஸிம்மம். மகம், பூரம், உத்திரம் $\frac{1}{4}$.

இம் மூன்று நக்ஷத்திர பலனுமே. முதல் பாதியில் விசேஷ நன்மையளிக்கும். எல்லாக் காரியமும் சுலபமாகும். வித்யா விருத்தி, கீர்த்திபத்திரம் கிடைத்தல், உத்யோக லாபம், தெய்வ பலம் கிட்டுதல் முதலிய சுபங்களைத் தரும். பிற்பாதியில் மிசிர மாயும் வியாதியாலும் கொஞ்சம் கவலைகாட்டும். சில நஷ்டதனு வரத்தாலும் தொழில் ஓங்குதலாலும் கவலைநீங்கும். புதன் வியாழன் வெள்ளி சுபவாரமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம், சித்திரை $\frac{1}{2}$.

உத்திரம், ஹஸ்தம், சித்திரை மூன்றும் சம்பந்தப்பட்ட கன்னியாராசி பலன் கஷ்டத்தோடு சுபத்தைத் தரும். சத்துரு நாசமும், மேலோர் பெரியோர் அன்பும் கிட்டும். உத்யோக லாபமும், தொழில் மேன்மையும், சுபசோபனுதிகளும், கீர்த்தி பத்திரமும் கிடைக்கும். பந்துமித்திராளுடைய சேர்க்கையாலும் அதிக அலைச்சலாலும் வீண்செலவு ஏற்படும். ஹஸ்த நக்ஷத்திர கோசாரம் பூரண சுபத்தையும், தேவதா குருபக்தியையும்,

பெரியோர் தரிசனத்தையும், மனதுக்கு எல்லாம் இறைவன் செயல்தான் என்ற த்ருட பக்தியையும், தெற்குத் திக்கு பிரயாணத்தையும், ராஜாங்க மூலமாய் பல நன்மைகளையும் அடைய நேரும். மாதக் கடைசியில் 10 தினங்களில் சில அசுப சமாசாரக் கேள்வியும் ஏற்படும். குருவாரமும் சுக்கிரவாரமும் சுபமாகும்.

7. **துலாம்.** சித்திரை $\frac{1}{2}$, சுவாதி, விசாகம் $\frac{3}{4}$.

சித்திரையும் சுவாதியும் தெய்வசக்தியைத் தந்து, துலாராசி பலனை ஓங்கச்செய்யும். ஷை இரு நக்ஷத்திரக்காரர்களையும் இம் மாதம் ஒருவராலும் ஜயிக்கமுடியாது. அசாத்தியமெல்லாம் சுலபமாகுதல், புத்திராதிகளால்மேன்மையடைதல், கஷ்டங்கள் விலகுதல், நஷ்டதனம் கிடைத்தல், தொழில் ஓங்குதல், பெரியோர் நேசம் ஏற்படல், பிரமாதமான கீர்த்தியும், உத்தம பலபிராப்தியும் கிட்டும். விசாகம் சம்பந்தப்பட்ட துலாராசி பலன் முதல் பாதத்துக்கு நன்மையையும். மற்ற இரண்டு பாதம் சம்பந்தப்பட்ட துலாராசிக்கு ஏராள கஷ்டம் நஷ்டம் தொழில் குறை விவஹார உற்பத்தி அபவாதம் தொழிலாளிகளாலும், சத்துருக்களாலும், பந்து மித்திராளாலும் தாங்கமுடியாத சிரமங்கள் ஏற்பட்டு துன்பத்தை உண்டுபண்ணும். தெய்வ பலத்தை நாடினல் ஒருவாறு நீங்கிச் சுபமுண்டாகும், சனி செவ்வாய் அசுபமாகும். மற்ற வாரங்கள் சுபமாகும்.

8. **விருச்சிகம்,** விசாகம், $\frac{1}{4}$, அனுஷம், கேட்டை.

விசாகம் சம்பந்தப்பட்ட விருச்சிக பலன் நலமிராது. மற்ற இரண்டு நக்ஷத்திர பலனும், மங்களத்தைத் தரும். லாபத்தையும் ஆரோக்யத்தையும், ராஜசபா பிரவேசத்தையும். கீர்த்தியையும், உத்யோக மேன்மையையும் தரும். கல்யாணம் சித்திக்கும். நல்லோர் 'பெரியோர்களுடைய உபகாரம் கிட்டும். தெய்வமும் முன்நிற்கும். வெள்ளியும் புதனும் சுபவாரமாகும்.

9. **தனுசு.** மூலம், பூராடம், உத்திராடம் $\frac{1}{4}$.

மூலம் முதல்பாதமும், பூராடம் பூராவும், உத்திராடம் முதல்பாதமும் க்ஷேமலாபத்தையும், உத்யோக லாபத்தையும், மேலோர் அன்பையும் உண்டுபண்ணும். மூலம் 2, 3, 4, பாதங்கள், ரோகத்தையும் நஷ்டத்தையும் தரும். உத்திராடம்

முதல்பாதம் சுபமாகும். அத்துடன் எந்தகாலத்திலும் மனுஷ்ய பலத்தால் நடவாத பெரிய லாபகரமான சாதனம் கிட்டும். புதன் வெள்ளி வியாழன் சுபவாரமாகும்.

10. **மகரம்.** **உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம், அவிட்டம் $\frac{1}{2}$,**

திருவோணம் பூரா சுபபலனையே தரும். ஜயமும் கீர்த்தி பத்திரமும், முதன்மையும் பெரியோர்கள் நேசத்தையும் சந்தோஷத்தையும் தரும். அவிட்டத்துக்கும் உத்திராடத்துக்கும் மிசிரமான பலன் தரும். நல்லதும் கெட்டதும் மாறி மாறி நடக்கும். குடும்பத் தொல்லையும் பணக்கஷ்டமும் ஏற்படுமே தவிர மற்ற லௌகிக விவஹாரங்கள் எல்லாம் நன்மையாகவே முடியும். சனியும் புதனும் சுபமாகும்.

11. **கும்பம்.** **அவிட்டம் $\frac{1}{2}$, சதயம், பூரட்டாதி $\frac{3}{4}$,**

சதய நக்ஷத்திர பலன் நலமிராது. அவிட்டமும் பூரட்டாதியும் சம்பந்தப்பட்ட கும்பராசி பலன் சஞ்சாரத்தையும் அதிகச்செலவையும் தரும். தொழிலாளிகளும், பூமிக்குள்ளோரும் பலவித சிரமத்தை அடைவார்கள். மேல் அதிகாரத்தில் இருப்பவர்களாகில் அவர்களுக்கு கீழ் அதிகாரம் கிட்டும். அதாவது உத்தியோகத்தில் குறைவு ஏற்படும். ரொம்ப ஜாக்கிரதையாய் இருப்பது நலம். வியாழன் வெள்ளி சுபவாரமாகும்.

12. **மீனம்.** **பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி ரேவதி**

உத்திரட்டாதி ரேவதி சம்பந்தப்பட்ட மீனராசி பலன் மிசிரமாகும். சதா கவலையைத் தந்தாலும் முடிவில் எல்லாம் சுபமாகவே முடியும். உபகாரம் கிட்டும். தொழில் ஓங்கும். தெய்வபலம் பிரகாசிக்கும். விரோதிகள் சரண் அடைவார்கள். விவஹாரம் ஜெயிக்கும். சுபசோபனுதி சந்தோஷ சமாசாரம் கிடைக்கும். மனம் சாந்தியடையும். பூரட்டாதி 4-ம் பாதம் கெட்ட பலனையே தரும். தெய்வபலமிருந்தால் நலன்கிடைக்கும். சதா சிவசிந்தனை செய்தால் காலம் சுமாராக ஓடும். வியாழனும் புதனும் சுபவாரமாகும்.

ज्ञानज्ञेयं ज्ञातृकान्तं त्रिपदार्थं समुच्यते ।
तस्मात्स्वरूपं सर्वत्र प्रकाशानन्दविग्रहम् ॥
तत्प्राप्तिस्तत्परा मुक्तिः शिवजीवैक्यसम्भवम् ।

எனவும் சிவதுரியமடியாய் வருஞ் சொரூபானுபவமுண்டா மென்கிறது,

சிவமாம் நனவுந் திரிந்தெங் குமரன்
தவமார் கனவுந் தனிஞா னமதும்
அவமா மலமாற் றலுமகன் றப்பாற்
றுவமார் துரியஞ் சொரூவ மதாமே.

என்னும் திருமந்திரத்தானுமுணர்க. அன்றி நிராமயதேவர் நூலின்,

யாவையுஞ் சிவமே யாதியல்லவா மானந்தத்து
மேவிய சைதன்னிய மிருதரு சொரூப
... ... ஞூதரு சொருவ மோதி
லாவயிற் சத்தி சத்திய ஞானவாநந்த ...

என வரும் பிறவும் வருமாறு கண்டுகொள்க. இது தூலப் பிரணவமென்றும் வாக்கியப் பிரணவமென்றும் சொல்ல வரும் இதன்மேல் சுசுவரூபப் பிரணவமென்னும் சூக்குமப் பிரணவ முதனுன்கிற்கும் தூலப்பிரணவம் ... ... றெனினும் ஞானத்தோற்றம் வியாபகங் குவியு மூன்று மவத்தை யாமாறு மேல் விளங்கும். ஆண்டுஞ் சொரூபானு பவமுண்டாம். அது,

துரியங்கண் மூன்றுங் கடந்தொளிர் சோதி
யரிய பரசிவ மிவையாவையு மாகி
விரிவு குவிவற விட்ட நிலத்தே
பெரிய குருபதம் பேச வொண்ணதே. 2657

என்னும் திருமந்திரத்தால் உணர்க இவ்வாறு நிராமயதேவர் நூலினும் வரும்,

... ...
நான்மெ சொல்லுங்காலே நன்றுறு ...
நாடிய சுழுத்தி தன்பாற் ...
சொரூபங் துரியமாய்த் தோன்றுமன்றே.

என்பதனாலும் உணர்க. இவ்வாறன்றி,

पुरुषतत्वं, आत्मा कालपरं परव्योमं परात्परं ...

என்னும் ஏழுள் புருஷதத்துவம் ஆன்மா விரண்டின் றெரி சனமுஞ் சிவாவத்தைகள். காலபரம், வியோமமபரம் என்னும் மூன்றும் வள இவ்வைந்து...அவத்தையான விசுவ கிராசம் உபசாந்தமென்னும் இரண்டோடு கூட்டி யேழென்ற தென்னையேவெனின் தும்பதம் தத்பதவைக்கிய சித்தியினாற் சிவாவத்தைகளாய் வந்து முடிதலின் அனுவாதமாக வேழென்ற தென்க. அது ஞானசித்தியில்,

द्वयोरैक्यं तु संप्राप्ते पराप ... पः
असिपदं शिवरूपं द्वयोरैक्यं प्रकाशितम् ॥

எனவும் திருமந்திரத்தில்,

இடனொரு மூன்றி லிசைந்த வொருவனு
கடனுறு மவ்வுரு வேறெனக் காணுங்
திடமது போலச் சிவபர சிவ
னுடனுறு பேதமு மொன்றென லாமே.

என வருமாற்றானுமுணர்க. இப்பேதங் துரியங்கள் சாத்திர மாகவும் கூறுமாறு போலக் கோடலாம். இவ்வேழிற்கு மூலாகமம், முன்னுதாகரித்தாம். பிறவாறு முளவேற்காண்க.

43. * * *

மனன மிந்நிலையில் என்பது மனனங்கூறி நிதித்தியா சனத்தினிகழும் நிட்டானுபவமினிக்கூறுது மென்கின்றது.

ஈண்டுக்கூறிய விருப்பத்தேழவத்தை யாவன துலப்பிரண வத்திற் சீவன் முத்தி பரமுத்தி சிவமுத்தி சொரூபமுத்தி யென்னும் நான்கு, தூரியத்தினிகழும் பத்தவத்தையிற் சொரூபந் தள்ளி யொன்பதுமீச சொரூபமடியாகப் பிறக்குஞ் சூக்கும பிரணவ முத்தி மூன்றும் அதிசூக்கும் மகாசூக்கும் ஆனந்தப் பிரணவ மூன்றுமாக அறுவகை முத்தியினுஞ் சொரூபமடியாய் பிறத்தலின் அஃதொழித்துப் பதினெட்டு விதமாம் அவத்தைகளுமாம். இவையெல்லா முற்கூறியவாறே தூலப் பிரணவஞ் சூக்குமப்பிரணவம் அதிசூக்குமப் பிரண வம் மகா சூக்குமப் பிரணவம் ஆனந்தப் பிரணவமென்னும் ஐந்துப் பிரணவா வத்தைகளாயடங்கு மென்க. 43

44. * * *

'அநுபவமாந் தெளிவினேடு' என்பது சம்பிரதாயோப தேசம் பண்ணுதற்குரிய சாதன முதலானவற்ருனிகழ்த்துந் திருவடி வைப்பாம் ஞானதீக்ஷையாமாறு கூறுகின்றது. ஈண்டுக் குருநாதரடியிணையை நிகழ் வெண்மை செம்மை யென்றது. ஞானசித்தியில்,

> रक्तं शुक्लं द्विधामिश्रं प्रभाकरप्रकाशकम् ।
> पदं स्थितं ... ...

என வருமாற்ருன் உணர்க, இனித் திருமந்திரத்தில்,

> தாடந் தளிக்குந் தலைவனே சற்குருத்
> தாடந்து வேதாந்தந் தன்னைத் தரவல்லோன்
> ருடந்து தத்துவா தீதத்துச் சார்சீவன்
> ருடந்து பாசாந் தனிப்பிக்குந் தானே. 2049

> காலுந் தலையு மறியார் கலதிகள்
> காலந்தச் சத்தி யருளென்பர் காரணன்
> மாலொன் று ஞேயமே பண்பார் தலையுயிர்
> காலந்தச் சத்தியைக் காட்டவீ டாகுமே. 2425

எனவும் பிறவும் வருமாற்றானுணர்க............நான்கென்பது முதலானவற்றிற்கு முன்னுதாகரித்தவை கண்டு கொள்க.

45. * * *

சிவசாக்கிரமாகும் என்பது சிவாவத்தை நான்கினும் நிகழும் மநுபவம்கூறுகின்றது. **சிவசாக்கிரமாகு மிந்திரியக் காட்சி** என்றது காரியோபாதியேமொடுங்கூடக் கலந் தறிவதை,

உயிரினேடுணர்வு வாயிலொளியுருவாகிப்பற்றிச்
செயிரொடு விகற்பமின்றித் தெரிவதிந்திரியக்காட்சி.
—சித்தி.

யென்றது ஈண்டைக்கேலாதாம்; ஈண்டு விகற்பஞானங்கூட நிகழ்தலின். **செறிகனவுக்காட்சி** என்றது அந்தக்கரணம் ... நான்குமுயிருங்கூடியறிதலே. இனி **சாக்கிரத்தில் சுழுத்தி** என்றது பிராணவாயுவோடுங் கூட வந்தக்கரணம் வியாபார மொழிதலே. அது பரிபூரணசித்தியில்,

சிறந்த நனவின்னனவதே தென் றெண்ணிற்
செப்புமனம் பொறி புலனோர் பொருளிற்சேரல்
நிறைந்த நனவதிற் கனவதே தென்றெண்ணில்
நினை பொருளை மருவிமனம் நினையாநிற்றல்
அறைந்த கனிவினிற் சுழுத்தியதுவேதென்னில்
அறிபொருளும் மன நினைவுமழிந்து நிற்றல்
எறிந்த வெழு கடலனுவாயுருகு மன்பாய்
யிவற்றை யநுபவமாக விருந்து பாரே.

என வருமாற்றான் உணர்க. **மேவுமிங்கே யிருளகன்ற வறிவுண்டென்று விளங்குயிரின் றெரிசனமேதுரியமாகும்** என்பது பரிபூரணசித்தியில்,

திணிந்த விருளாய்ப் பாவனையாய்த்
திகழ்ந்த மாயை தனைத்தெரிந்தங்
குணர்ந்த பொருளே தோன்றுளதோ
வில்லையோ பார்த்துரை யென்னப்
பணிந்து பரனே பகர்மூலப்
பகுதியாதிப் பவவித்தாய்
அணைந்த மாயை தனையுணரு
மறிவுண்டுண் டென்றதிசயித்தான்.

என வருமாற்றானுணர்க. இனி யவத்தைக் கழிவிற்கு வருமாறு,

அவத்தையொரு மூன்றையு மறிந்துகரி யாயே
எவற்றையு மழித்தொளிரும் (ஏக) வறிவாகத்
துவக்கற விறந்ததுரி யச்சுட ருணர்ந்தோர்
தவத்தலைவ ரென்றுமறை தானறை யுமன்றே,

என நிராமயதேவர் நூலின் வருமாற்றான் உணர்க. இவ்வாறு வரு மூன்றுயிர் வேறுபாட்டின்பின் சுத்த.........நிகழுமாறு திருமந்திரத்தில்,

ஆறாறி லையைந் தகல நனாநனா
வாறா மவைவிட வாகு நனாக்கனா
வேறான வைந்தும் விடவே நனாவினி
லீறாஞ் சுழுத்தி யிதின்மாயை தானே. (2197)

எனவரும். இதனானே திரோதாயி முதனான்கு மலமுங்......
............அது,

சாக்கிர சாக்கிரந் தன்னிற் றிரோதாயி
சாக்கிர சொப்பனந் தன்னிடை மாமாயை
சாக்கிரந் தன்னிற் சுழுத்திதற் காமியஞ்
சாக்கிரந் தன்னிற் றுரியத்து மாயையே. (2167)

என்பதனால் உணர்க, இவ்வாறு கழலவே பிர்ம்ம பிராண பஞ்சகமு நீங்கும். அது ஞானசித்தியில்,

जाग्रजाग्रस्थितं ब्रह्मा जाग्रत्स्वप्नस्थितो हरिः ।
जाग्र सुप्तिस्थितो रुद्रस्तमसा मोहिनी तथा ॥
जाग्रत्तुर्यस्थितेशस्तु ... ... तद्वन्ध ।
गुरुकारुण्यमात्रेण वं मलोदयम् ॥
......प्रकाशार्थं जीवचैतन्यरूपकम् ।
जाग्र......प्रोक्तं तुर्यात्मसम्भ ॥
त्वं पद्मात्मसम्भवम् ।
उपाधिशून्य जीवात्मा त्वं पदार्थस्य शुद्धिमान् ॥

என வருமாற்றான் உணர்க. இவ்வாறு தன்னையறிவதனின் மிக்கப்பேறில்லை அது,

தன்னையறியிற் றனக்கொரு கேடில்லை
றன்னை யறியாமற் றான்கெடு கின்றான்
றன்னை யறியு மறிவை யறிந்தபின்
றன்னை யருச்சிக்கத் தானிருந் தானே. (2355)

என்னும் திருமந்திரத்தான் உணர்க. 45

46, 47. * * *

இவ்விடைநின்றே கழன்ற என்பதும், **பொறியெனவே நியதமன்றி** என்பதும் பரசாக்கிரானுபவம் கூறும். ஈண்டுப் பொறியெனவே நியதமன்றி யென்பதனுணறிந்த தொன்றறியா நியதமன்றி யெக்காலத்துணர்தல் என்க. அது ஈசுவர சுவபாவமாகலின். அனைத்தும் முன்காட்டிய உதாரணத்தால் விளங்கும். 46, 47.

48. * * *

பகர் தருமமவ்வேழினுள்ளுமென்பது. முன்சொன்ன கனவுஞ் சுழுத்தியும் துரியமுமாமனுபவம் கூறுகின்றது. ஈண்டுப் பகர்தரு மவ்வேழினுள்ளும்......டவபாகி மூன்றும்

.........ஒடுங்குங் கால பரத்தோடு நின்று கவரு முன்போ லறிவு விரியாவண்ணம் தற்போதமாயிருத்தல் என்பதற்கு முற்கூறியவாறு யறிவு மழுங்கி நிற்றலெனக் கொள்க. அது விரியாவண்ணம் தற்போதமாயிருத்தல் என்பதனுனுந் தோன் றும். இதனுனேயன்றே,

கால பரத்தி லசைந்துந் துரியத்துச்
சால விரிந்துங் குவிந்துஞ் சகலத்தில்
ஆயின வாருரு றடைந்துந் திரிந்தேற்குத்
தூய வருடந்த நந்திக்கென் சொல்வனே.

என வந்ததூஉம். இப் பராவத்தையநுபவம் நிராமயதேவர் நூலின்,

பிறிவற்றறி வாகிய பெற்றியெனு
வறிவிற்கறி வாகிய வப்பரமே
செறிவிற் பரையா லுயிர்செய்ததனு
ளுறைவுற் றதுபூ மணமொத்திடவே.

என வருமாற்ருன் உணர்க. ஈண்டுப் பரையாலெனவே யத னிற் ருேன்றுஞ் சகளாதி பேதங்களுங் குண்டலி காரியமாய்ப் பரையிற் ருேன்றிய பிறவு மீண்டொழியு மென்பதாம். அது அந்நூலின்,

ஆதலாற் சகளரை கன்மயாவையு
மோதலாற் சொலுருபா ரூபங்களும்
யாதுமாய் முத்திக் கேதுவாம் யாவையு
ஓதுக் குண்டலிநிக்கு ளுதித்தலே.

என வருதலின். மற்று முற்காட்டியவற்றுட் கண்டுகொள்க.

49. * * *

இன்னிலையாம் பாதுரியம் என்பது சிவாவத்தை நான்கின் அனுபவமுங் கூறுகின்றது. இச்சிவாவத்தையிற் சிவாதி மூன்றுமின்றி திருக்கு திருச்சிய பேதமுண்டானது

மின்றாய் நிகழும். ஆனந்தானுபவம் நிகழும். அது நிராமய தேவர் நூலின்,

மாயையிற்றோன்றுஞ்சீவன்
வண்பரைத் தோன்றுமீசன்
ஆவையிற் சிவையிற் றோன்று
மச்சிவன் மூன்றும் வேறாய்
ஓவலில் வெதிரே கத்தால்
உறுதரு திருக்கு திருசிய
மாவயிற் புணர்ந்த தொன்றாய்
யன்றிநின் றமர்வதாகும்.

சிவமா மறிவே கணுமா நிலைசெற்
றவமா றியவா னந்தமே லிடவத்
துவமா றியமூ வுருவோ ருருவாய்ப்
பவமா றி... ... ...மே.

எனவும் பிறவும் வருமாற்றான் உணர்க. 49

50. * * *

வந்த சிவதுரியத்தின் கீழாயென்பது சிவதுரியத்தின் ஒன்பதவத்தையுங் கழியவே யெல்லாப் பாசங்களு மொழிதலிற் சிவதுரியமுண்மையாய் நிகழு........ சித்தாந்தத்திற் கூறும் தசகாரியானுபவமும் ஈண்டடங்குமென்கின்றது. அவ்வாறு வருந் தசகாரியம் ஞானசித்தியில்,

देव्युवाच—

परमेश महेशान परात्पर परःशिव ।
सिद्धान्तमार्ग सम्बोधं किं प्रकारं तदुच्यतां ॥

ईश्वर उवाच—

श्रणु देवि महा भागे शिवसिद्धान्त लक्षणम् ।
पाशः पशुः पतिर्ज्ञेयं त्रिपदार्थं त्रिनिर्णयम् ॥
पाशः पशुः पतिर्सिध्ये तृतीयेच्छा तु दीक्षया ।

தருமபுர ஆதீனப் பல்கலைக்கல்லூரியில்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் கழகச் சிறப்புக் கூட்டம்.

2—3—53 திங்கட்கிழமையன்று மாலை மேற்படி கல்லூரிக் கட்டிடம் அருணந்தி நிலையத்தில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் கழகச் சார்பில் சிறப்புக் கூட்டம் கூட்டப்பெற்றது. சாத்தூர் வழக்கறிஞர், திரு. T. S. கந்தசாமி முதலியார் M.A., B.L, அவர்கள் மாணவர்கட்குச் சில நல்லுரைகூற இணங்கினார்கள். தேவாரப் பாடசாலை மாணவன் S. சம்பந்தம் இறைவணக்கம்பாடக் கூட்டம் தொடங்கப்பட்டது. கழகச் செயலாளர், இரா. சண்முகம் சென்றவார அறிக்கையை வாசித்தார். கல்லூரித்தலைவர் பிர்மஸ்ரீ Y. மகாலிங்க சாஸ்திரிகள் M.A., B.L., வழக்கறிஞருக்கு வரவேற்புரை கூறினார்கள். பின்னர் முதலியாரவர்கள் திருக்குறளிலே தோய்ந்தெழுந்த கருத்துவளம் உடையர் ஆதலால் செய்ந்நன்றியறிதலில் உள்ள ஒரு சில குறள்களுக்குப் புதியகருத்து நயங்களை வெளியிட்டுச் சொற்பொழிவாற்றினார்கள். வள்ளுவர் கணித நூற்புலமையுடையவர்; கருத்துவளமுடையவர்; உவமைகளில் பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுப்பவர் என்பது அவர்கள் பேச்சில் அழகுறப் பொலிந்தன. பின், கல்லூரிப் பேராசிரியர், வித்துவான், திரு. V. S. குருசாமி தேசிகரவர்கள் வழக்கறிஞரின் புலமையைப் பாராட்டி நன்றியுரை நவின்றார்கள். பின்னர் இறை வாழ்த்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

தருமபுர ஆதீனத்தின் தமிழ்ப் பரிசு.

மொழிவளர்ச்சிக்கருதி, தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானமவர்கள் பல உயர்நிலைப்பள்ளிகளில் பரிசுத்திட்டங்கள் அமைத்துள்ளார்கள். அத்திட்டத்தின்படி இம்மாதத்தில் மாயூரம் நகரிலுள்ள நகராண்மைக்கழக உயர்நிலைப்பள்ளிகளில் பயின்று S. S. L. C. 1952 மார்ச் பரீக்ஷையில் தமிழில் முதல்வராகத்தேர்ந்த மாணவர்களுக்குப் பொற்பதக்கப் பரிசு, அந்தந்தப்பள்ளியில் இம்மாதம் நடைபெற்ற ஆண்டு விழாக்களில் வழங்கப்பெற்றது. மாயூரம் நகராண்மைக்கழக உயர்நிலைப்பள்ளியில் கிருஷ்ணமூர்த்தி என்ற மாணவரும், மாயூரம் கூறைநாடு உயர்நிலைப்பள்ளியில் B. சேஷையன் என்ற மாணவரும் பரிசுபெற்றனர். ஆதீனத்துப் பிரதிநிதிகளும் விழாவில் கலந்துகொண்டார்கள்.

Regd. No. M. 4454.　　GNANASAMBANDAM.

குடந்தையில் அருள்நெறித் தொண்டு.

குடந்தையில் 28—2—53ந் தேதியன்று நிகழ்ந்த மாசிமகத் திருநாளையொட்டி அருள்நெறித் திருக்கூட்டத்தினர், காலையில் சிவபுராணத்தை ஓதிக்கொண்டு தெருக்கள்தோறும் வலம்வந்தனர். ஆங்காங்கே மணிவாசகப்பெருந்தகையின் திருவாசகத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் திருவாளர்கள் சா. கணேசன், அருட்பாமணி N. விசுவநாதன் ஆகியோர் விளக்கங்கூறினர். தமிழ்நாடு அருள்நெறித் திருக்கூட்டத் தலைவர் திருப்பெருந்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக அடிகளார் ஊர்வலத்திற்குத் தலைமைவகித்து ஆங்காங்கே அருள்நெறியின்பெற்றியினை விளக்கினார்கள். இதனையொட்டி, தலைமைத்தபால் அலுவலகத்திற்கு எதிரிலுள்ள பெரிய மடத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்குத் திருப்பெருந்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக அடிகளார் தலைமைவகித்தார். திருவாளர்கள் நல்லதம்பி, அருட்பாமணி N. விசுவநாதன், சு. சுந்தரேசன் செட்டியார், சா. கணேசன் ஆகியோர் அருள்நெறித் திருக்கூட்டத்தின் கடமைகளை விளக்கிப்பேசினர்.

மகாமகோபாத்யாய, டாக்டர்
நூல் நிலையம்
சென்னை-20.

தருமபுர ஆதீன வெளியீடு.

திருக்குறள் - உரைவளம்.

பொருட்பால்.

கிரௌன் 1 x 4 சைஸ் 1128 பக்கங்கள்.

காலிகோபைண்டு ... ரூ. 13—8—0.
தபாற்செலவு வகையரு ... ரூ. 1—8—0.

காமத்துப்பால்

கிரௌன் 1 x 4 சைஸ் 536 பக்கங்கள்.

காலிகோபைண்டு ... ரூ. 6—0—0.
தபாற்செலவு வகையரு ... ரூ. 1—0—0.

கிடைக்குமிடம்: **மானேஜர்**, தருமபுர ஆதீனம்.
தருமபுரம், மாயூரம் P. O. தஞ்சை ஜில்லா.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press. Dharmapuram. (Mayuram) 9—3—1953